
# நம்மட முற்றம்

'அறிவைத் தந்திடத் துடிக்கும் தமிழ்த் திங்கள் ஏடு'

மீனம் (பங்குனி) – 2023 | இல்லம் – 03 | முற்றம் – 05 | உருபா – 150.00





* தாக்குதல் இடி முழக்கம்
* வாடகை வீடு
* முயன்று முன்னேறு
* வாரிசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NAWAMILA'S

*Dealers in Textiles*





**#205 N.C. Road,**
**Trincomalee.**

**026-2222551**
**026-2223209**

Nawamilas trincomalee

nawamilas205@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.கதிர்.திருச்செல்வம்

இதழ் ஆசிரியர் குழு

திரு. அரவிந்திரன்
திரு. நா.காளிராசா
திரு. வ.மகேஸ்வரன்
திரு. வை.கமலநாதன்
திரு. தா.சிவானந்தம்
திரு. கி. அருள்செல்வன்
திருமதி. சுஜந்தினி யுவராஜா
ஜனாப். ஹ.மு.மு.மன்சூர்
ஜனாபா. மர்ளியா சக்காப்

தொடர்புகளுக்கு
"நம்மட முற்றம்"
48/116, விநாயகபுரம்,
கண்டித் தெரு,
திருக்கோணமலை.

தொலைபேசி : 0772908990

மின்னஞ்சல் :-
nammadamuttam20@gmail.com

சிறுகதைகள் — பக்கம்


- வாரிசு 16
- வாப்பாவும் பூனைகளும் 02
- மல்லிகை வாசம் 34


கவிதைகள்


- சொல்லிவிட்டுச் செல் 48
- வாடகை வீடு 37
- முயன்று முன்னேறு 37
- நானும் அவனும் 09
- சுயம் எல்லை கடத்தல் 10
- கூகை 10
- நம்மட முற்றம் 11
- பேரணி போகுது 15
- உச்சிக்கொட்டு 15
- புத்தகம் பரிசளிப்போம் 28
- ஆகுதியானவர்கள் 28
- பணம் தின்னிகள் 29
- வெல்க முற்றம் 33
- குறு(ம்)பு கவிதை 33
- அசையும் நிழல் 49
- கழனி முத்தம் 49
- சங்கப்படலை 49
- பெண்கள் உள்ளம் 53
- எங்கட முற்றம் 53


கட்டுரைகள்


- 13வது திருத்தச் சட்டம் 12
- தாக்குதல் இடிமுழக்கம் 30
- இயக்கவியல் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் 38
- திராணி 52
- நம்மட படைப்பாளி 50
- மன்னம்பிட்டித் தமிழ்க்கிராமத்தில் தமிழ், தெலுங்கு மொழிச் செப்புப் பட்டயம் கண்டுபிடிப்பு. 54


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைமுகச் சுனாமியாகும் போதைப்பொருள் பயன்பாடு.

போதைப்பொருள் பயன்பாடு சிறிலங்காவின் எதிர்கால இருப்பைக் கேள்விக் குறியாக்கிக் கொண்டு செல்வதனை நாளாந்தம் நாம் படிக்கின்ற நாளேட்டுச் செய்திகளும் நம் கண்கள் முன்னால் காணும் நிகழ்வுகளும் மெய்ப்பித்து நிற்கின்றன. போதைப்பொருள் கட்டுப்பாடு தொடர்பில் இராணுவ மயப்படுத்தப்பட்ட அணுகுமுறையினை சிறிலங்கா அரசானது கையாண்டு வருகின்ற போதிலும் போதைப்பொருள் பயன்பாடு தொடர்வதோடு அதிகரித்தும் வருவதனை அவதானிக்க முடிகின்றது. இன்று இன்னும் ஒருபடி மேலுக்குச் சென்று 'பள்ளி மாணவர்கள் போதைப் பொருளை அதிகளவில் பயன்படுத்துகின்றனர்' என நாட்டின் கல்வி அமைச்சரே பகிரங்கமாகச் சொல்லும் அளவில் வந்து நிற்கிறது. நமது நாட்டின் 'நிலைமை' நாட்டில் ஏற்பட்டுள்ள பொருண்மிய நிலையின் நி-மிர்
த்தமாக வெறுப்புக்குள்ளானவர்களும் போதைப்பொருளுக்கு அடிமையாவதாக சொல்லப்படுகின்றது. இது எந்தளவிற்கு ஏற்புடைய கரணியம் என்று தெரியவில்லை. போதைப்பொருள் பயன்பாட்டிற்காக திருட்டுச்செயல் வீட்டில் தொடங்கி பக்கத்து வீட்டிற்கு பரவி ஊர் முழுவதும் பரவுகின்ற நிலையும் ஏற்பட்டுள்ளது என்பதும் மறுப்பதற்கில்லை. போதைப்பொருளினைப் பயன்படுத்தும் பள்ளி மாணவர்களது வீட்டில் பெற்றோர் பணம் தர மறுக்கத் தொடங்கியபோது சிறிது சிறிதாக திருடத்தொடங்கி விட்டார்கள் என்பதும் தம்பிள்ளை போதைப்பொருளுக்கு அடிமையாகிவிட்டதனை வெளியே சொன்னால் தன் வீட்டினது மரியாதை காற்றில் பறந்துவிடும் என்ற பயத்தில் செய்வதறியாத திகைப்பில் வேதனை கலந்த கவலையுடன் நாட்களைக் கடத்திக்கொண்டிருக்கும் நிலையும் நம்மை குமுகாயம்பால் அச்சமடைய வைத்துள்ளது. இந்தநிலை இன்று 'அவர்வீட்டில்' என்ற நிலையில் இருப்பவர்கள் நாளை 'என்வீட்டில்' என்ற நிலை வரும்போது என்ன செய்யப்போகின்றார்கள்? என்பதே நம் ஒவ்வோர் முன்னுள்ள கேள்வி யுமாகும். போதைப்பொருள் பயன்பாடு நம் ஒவ்வொருவரையும் தின்று கொல்லப்போகின்ற பாரிய மறைமுகச் சுனாமியாக உருவெடுத்து வருகின்றது. தீர்வுகாண வேண்டிய இடத்தில் இருக்கும் நாம் அனைவரும் தீர்வைப் பற்றிச் சிந்திப்பது அல்லது சிந்திக்கச் செய்வது குமுகா யதிலுள்ள இயங்குநிலையாளர்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பு என் பதனை நினைவில் கொண்டு செயற்பட வேண்டும் என 'நம்மட முற்றம்' கோரிக்கை விடுக்கின்றது.

**முதன்மை ஆசிரியர் – நம்மட முற்றம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாப்பாவும் பூனைகளும்

அ.வா. முஹ்சீன்



எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து எங்கள் வீட்டில் பூனைகளைப் பார்த்திருக்கிறேன். எப்போதும் ஒன்று-க்கு மேற்பட்ட பூனைகள் எங்கள் வீட்டு வளவிற்குள் காணப்படும். சிறிதும் பெரியதுமாக, மரங்களின் கீழோ அல்லது வேலியோரத்திலோ அவை காணப் -படும் பெரிய பூனைகள் அனேகமாக தூங்கிக்கொண்டிருக்கும். குட்டிப் பூனைகளோ ஓயாமல் விளையாடிக் கொண்டும், தமக்குள் போலியாகச் சண்டையிட்டுக்கொண்டும் இருக்கும். ஆனால் எல்லாப் பூனைகளும், அடிக்கடி தமது உடல்களை நாக்கினால் நக்கி சுத்தம் செய்து கொண்டேயிருக்கும்.

இந்தப் பூனைகள் எங்களின் செல்லப் பிராணிகள் அல்ல. அவை எங்களின் வீட்டில், அதாவது வீட்டு வளவில் வசித்து வந்தவை. என் வாப்பாவினால் தான் அவை இங்கு வசித்தன. சந்தையில் மீன் வாங்கி வரும் போது, வாப்பா இந்தப் பூனைகளுக்கென்றே சிறியமீன்களையும், மீன் குடல்களையும் வாங்கி வருவார்கள். என் உம்மாவிற்கு பூனைகளைக் கண்ணில் காட்டேலாது. எப்போதும் பூனைகளை அதட்டித் துரத்திக் கொண்டேயிருப்பார்கள். ஆனால் வாப்பா பூனைகளுக்கு வாங்கி வருகின்ற மீன்களையும், மீன் குடல்களையும் உம்மாதான் பூனைக்கு வைப்பார்கள். அதோடு, மிஞ்சுகின்ற உணவுகளையும் அவற்றிற்கு வைப்பார்கள்.

இவற்றை விட பூனைகளின் கழிவுகள், சில நேரங்களில் அதன் கக்கல் என அனைத்தையும் அள்ளி, வளவை துப்பரவு செய்வதும் உம்மாதான். ஒரு நாள் ஒரு பூனையின் பல்லிடுக்கில் ஒரு மீன் முள் பொறுத்து விட்டது. அது வாயை மூட முடியாமலும், முள்ளை வெளியேற்ற முடியாமலும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தது. கடைசியில் உம்மாதான் அதைப் பிடித்து, அதன் வாய்க்குள் கையை விட்டு, அந்த முள்ளை எடுத்து விட்டார்கள். பூனைகளினால் பொருளாதார ரீதியாகவும் எனது குடும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-த்திற்கு பணப்பாதிப்பு ஏற்பட்டு வந்தது. எப்படியும் நாளாந்தம் ஒரு கணிசமான உணவு அவற்றிற்காக செலவிடப்பட்டது. சில சந்தர்ப்பங்களில், அவை கள்ளத் தனமாக சமைத்த உணவுகளைச் சாப்பிட்டதும் உண்டு. இந்த முயற்சியில் அவை கறிச்சட்டிகளைத் தட்டி உடைத்தும் உள்ளன. இதற்குப் பூனைகளில் மட்டும் குறை சொல்ல முடியாது. மணக்க மணக்க மீன்களை பொரித்தும், ஆக்கியும் வைக்கின்ற உம்மாவும் எனது ராத்தாமார்களும் இதற்கு ஒரு காரணம்தான்.

இவ்வாறு எங்கள் வீட்டில் பூனைகள் தொடர்ச்சியாக இருந்தபோதிலும் அவற்றினால் நான் அதிகளவில் ஈர்க்கப்படவில்லை. ஒருவேளை என்னுடைய சிறு வயதில், ஒரு குட்டிப்பூனை என்கையில் தனது நகத்தினால் விறாண்டியதால் எனக்கு ஏற்பட்ட வலியும் அச்ச உணர்வும், ஆழ்மன நினைவாக என்னுள் உறைந்து, பூனைகள் மீதான என் ஈர்ப்பைத் தவிர்த்தனவோ தெரியவில்லை. நான் பாட சாலைக்குப் போகத் தொடங்கியதன் பின்னர், எனது நண்பர்கள் வட்டம் அதிகரித்து அவர்களுட னான எனது விளையாட்டுகளும் வீட்டைவிட்டு வெளியில் அமைந்ததால், பூனைகள் விடயத்தில் நான் ஏறத் தாழ அக்கறையற்றவனாகி விட்டேன்.

என்றாலும், இந்தப் பூனைகள் என்வாழ்வில் பெரும் நெருக்கடியாக மாறிய சந் தர்ப்பம் என்னுடைய திருமணத்தின் பின்னர் உருவானது. என்னுடைய இரண்டு ராத்தமார்களுக்கும் வீடுகள் கட்டி, அவர்களுக்குத் திருமணங்கள் முடிந்து, பின்னர் எனது மூன்று நானாமாரும் திருமணம் முடித்து சென்ற பின்னர், உம்மாவையும் வாப்பாவையும் பார்க்கின்ற பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டது. உம்மாவும், வாப்பாவும் தாங்கள் இவ்வளவு காலமும் வாழ்ந்த இந்த வீட்டை விட்டு வேறு எங்கும் செல்ல விரும்பவில்லை. எனவே அவர்கள் இந்த வீட்டிலேயே தங்கிவிட இன்னமும் திருமணம் முடிக்காதவனாக இருந்த நான் அவர்களுடனேயே இருந்து, அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டியேற்பட்டது.

பொதுவாக எங்கள் ஊரில் வயதான காலத்தில் உம்மா, வாப்பாவைப் பராமரிக்கின்ற பொறுப்பு பெண்பிள்ளைகளுக்கே உரியது. பெண்பிள்ளைகளுக்கு வீடு கட்டி, அவர்களுக்கு சொத்தும் கொடுத்து திருமணம் முடித்து வைப்பதால், தலைமுறை தலைமுறையாக பெண் பிள்ளைகளே தமது பெற்றோர்களைப் பராமரித்து வந்தி ருக்கிறார்கள். ஆனால் என்னுடைய விடயத்தில் இது தலைகீழாகி விட்டது. ஓர் எழுது வினைஞனாக அரசாங்க உத்தியோகம் பார்த்துவந்த எனக்கு இது ஒருவகையில் சிரமமான காரியமாக இருந்தது. வயதாகி விட்டதால் உம்மாவிற்கும், வாப்பாவிற்கும் அடிக்கடி சுகமில்லாமல் ஆகியது. வீட்டில் யாரும் இல்லாததால், இரவில் நேரத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கு வரவேண்டியது அவசியமாகியது. இவற்றை விட, உம்மாவின் சமையல் வரவர சுவையற்றதாகி வந்தது. இவையெல்லாம் சேர்ந்து, ஒரு முக்கியமான முடிவை எடுக்கும் நிலைக்கு என்னைத் தூண்டின. இந்த முடிவை எப்படி குடும்பத்தாரிடம் சொல்வது என தயங்கிக் கொண்டிருந்த நிலையில் ஒரு நாள் இரவு வாப்பாவே அதை தொடங்கினார்கள். இரவு சாப்பாட்டுக்குப் பின்னர், வழக்கம்போல நான் தொலைக் காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது, வாப்பா வந்து அருகில் அமர்ந்தார்கள். கதவிற் குப் பக்கத்தில் உம்மாவும் உட்கார்ந்தார்கள். "தம்பி, ஒள்ளுப்பம் தொலைக்காட்சிய நிப்பாட்டு. ஒனக்கிட்ட ஒண்ணு கதைக்கணும்" நான் தொலைக்காட்சியை நிறுத்திவி -ட்டு, சற்று யோசனையுடன் வாப்பாவைப் பார்த்தேன். "இஞ்ச பார் தம்பி! எங்களுக் கும் வயசாயிட்டு. உம்மாக்கும் சோறு, கறி ஆக்கிறதெல்லாம் சிக்கலா இரிக்கி. அதால நீ ஒரு கலியாணம் முடியேன்." சிறிது காலமாக நான் சொல்லத் தயங்கி வந்ததை வாப்பா சொல்லி விட்டார்கள். "ஓம் தம்பி! எம்புட்டுக் காலத்துக்குத்தான் நீயும் தனியா இரிப்பா. ஒனக்கும் வயசாயிட்டு தான. இஞ்சப் பாரு இந்த ஊடும் வளவும் எனக்கு எங்க வாப்பா தந்தது. அத நா ஒனக் கே தாறன். நீ கலியாணம் முடிச்சி, பொஞ்சாதிய இஞ்சயே கூட்டிக்கிட்டு வாப்பா"

உம்மாவும், வாப்பாவும் தங்களுடைய முடிவைச் சொல்லி விட்டார்கள். அது எனது தலையில் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டதுபோல இருந்தது. எங்கள் ஊரில் எங்கும் நடக்காத ஒரு விடயமாக, நான் திருமணம் முடித்து எனது மனைவியை எனது வீட்டிற் குக் கூட்டி வரவேண்டுமாம். இதை நான் திருமணம் முடிக்கப் போகின்ற பெண் சம்மதிக்க வேண்டும். இதைவிட ஒரு சிக்கலான விடயம் ஒன்று இதற்குள் இருந்தது. அதாவது, வீட்டையும் வளவையும் எனது பெயருக்கு எழுதித் தருவது என்பது, எனது குடும்பத்தில் ஒரு பூகம்பத்தை ஏற்படுத்தி விடக்கூடும். ஏற்கனவே என்னுடைய மூத்த ராத்தா இங்கு வரும்போதெல்லாம், தனக்கு மூன்று பெண் குழந்தைகள் இருப்ப தாகக் கூறி, தனக்கு இந்த வீட்டையும் வளவையும் தர வேண்டும் என்று மறைமுக மாக சொல்வதை வழக்கமாக்கி இருந்தாள். இதை விட என்னுடைய இரண்டாவது நானா, இரும்புக்கடை போட்டு, அதற்கு 'முதல்' காணாது என அடிக்கடி சொல்லி, இந்த வளவை விற்று பணம் பெறுவதில் குறியாக இருந்தான். எனினும் இவற்றையெல் லாம் தாண்டி எனக்குத் திருமணம் நடந்தது. பிறந்ததில் இருந்து, நோயாளியாகவும், நோஞ்சானாகவும் இருந்ததால் என்மீது எனது பெற்றோருக்கு இருந்த கூடுதல் பாசம், என் பெயரில் வீட்டையும் வளவையும் எழுதிவைப்பதில் பெரும் பங்கு வகித்தது.

அதே வேளை, நான் குடும்பத்தில் கடைசிப் பிள்ளையாகவும் ஒரு மதிப்புக்குரிய அரசாங்க உத்தியோகத்தோடு, இப்போது வீடு, வளவிற்கு உரிமையாளனாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததால், இலகுவாகவே எனக்குரிய பெண்ணைத் தெரிவு செய்ய முடிந்தது. எங்களது தூரத்து உறவு முறையிலான ஒரு பெண்ணுடன் எனக்கு இனிதே திருமணம் நடந்தேறியது. என்னுடைய மனைவி எங்கள் வீட்டிற்கு வந்த கொஞ்ச நாட்களிலேயே அவளின் முணுமுணுப்புத் தொடங்கி விட்டது. அவளுக்குப் பூனை களைப் பிடிக்காது என்ற விடயத்தை நான் அறிந்தபோது, இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையை நான் அடைந்தேன். அவளுக்கு பூனைகளைப் பார்த்தாலே அசூசையாக இருந்தது.

"இஞ்ச, இந்தப் பூனயயெல்லாம் எங்கயாவது அனுப்பிடுங்க"

அவளின் கோரிக்கையை நான் மறுக்க முடியாது. அவள் புதுப் பொண்டாட்டி. அத்தோடு, அவள் எங்கள் வீட்டிற்கு வாழ்வதற்கும் வந்திருக்கிறாள். இருந்தாலும் இந்த விடயத்தில் அவள் சொல்வது போன்று, நான் பூனைகளை எங்கேயும் அனுப்பிவிட முடியாது. ஏனென்றால் முதலாவது வாப்பா அதை விரும்பமாட்டார்கள். இவ்வளவு காலமாக எனது உம்மா எவ்வளவோ சொல்லியும் வாப்பா பூனைகளை வெளியேற்ற அனுமதிக்கவில்லை. இரண்டாவது, பூனைகள் அவ்வளவு எளிதாக தாம் வசிக்கின்ற வீடுகளை விட்டு போய்விடாது. வீட்டில் வசிப்பவர்கள் வெளியேறி, புது ஆட்கள் அந்த வீட்டிற்கு குடி வந்தாலும், பூனை அந்த வீட்டிலேயே வசிக்கும். பூனைக்கு எஜமான விசுவாசத்தை விட, வீட்டு விசுவாசமே அதிகம். எனவே இந்த நிலையை நாம் கவன மாகக் கையாள வேண்டியிருந்தது. கூரான கத்தியின் மீது நடப்பது போன்றிருந்தது எனது வாழ்க்கை. எனக்கு வாப்பாவின் முன்னிலையில் எதையும் கதைக்கும் தைரியம் இருந்ததில்லை. அதனால் எனது மனைவியையே நான் சமாதானப்படுத்த வேண்டியிருந்தது. ஒவ்வொரு நாளும், இரவில் அவளை சமாதானப்படுத்துவதிலேயே பெரும்பகுதி நேரம் கழிந்தது. அவள் எங்கள் வீட்டில் வாழ்வதற்கு உடன்பட்டு வந்திருந்த போதிலும், இந்த பூனை விவகாரத்தின் காரணமாக வாரத்தில் அரை வாசி நாட்களுக்கு மேல் அவள் தனது உம்மா, வாப்பாவுடனேயே போயிருந்தாள்.

நாட்கள் செல்லச் செல்ல, எங்கள் வீட்டில் பூனைகளின் எண்ணிக்கை படிப்படியே குறைந்து வந்து, இறுதியில் வயதான ஒரேயொரு பொட்டப் பூனை மட்டும் எங்கள் வளவில் தங்கியிருந்தது. உம்மா நோயாளியாகி விட்டார்கள். அதனால் முன்னர் போன்று ஒழுங்கான முறையில் பூனைகளுக்கு சாப்பாடு வைக்க அவர்களால் முடியாமல் போனது, பூனைகள் வீட்டைவிட்டு வெளியேறியதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். எனினும், அதனுடன் கூடவே, எனது மனைவியின் உடல்மொழியும் அவை வெளியேறியதற்கு ஒரு காரணமாக இருக்கும் என நான் உறுதியாக நம்பினேன். ஏனெனில் சில சந்தர்ப்பங்களில் அவளுடைய கண் உருட்டலையும், கை, கால் அசைவுகளையும் தாள முடியாமல் நானே சில மணித்தியாலங்கள் வீட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு வெளியேறியிருக்கிறேன். எனது மனைவிக்கு பிள்ளைப் பேறுக்கான காலம் நெருங்கி வந்தபோது அவள் என்னிடம் உறுதியாகச் சொல்லி விட்டாள். "இஞ்ச, கொழ -ந்தப் புள்ள இரிக்கிற ஊட்டுல பூன இருந்தா, அது புள்ளெக்குச் சரியில்ல. தொய் வெல்லாம் வரும். அதால, புள்ள பெரியாளா வரும்வரைக்கும் நா எங்கட ஊட்டுலய போயிரிக்கிறேன்." அவளுடைய கருத்து மருத்துவ ரீதியாக எவ்வளவு தூரம் சரி யானது என்று எனக்குத் தெரியவில்லை. என்னுடன் சேர்த்து, ஆறு பிள்ளைகள் இந்த வீட்டில் பிறந்து, பூனைகளுடனேயே வளர்ந்து பெரியாட்களாக ஆகியிருக்கிறோம். இதுவரைக்கும் எங்களில் யாருக்கும் தொய்வோ அல்லது வேறு நோய்களோ ஏற்பட்டதில்லை. இருந்தாலும் என்னுடைய மனைவியின் முடிவுக்கு எதிராக நான் எந்த வாதத்தையும் முன்வைக்க விரும்பவில்லை. அப்படி நான் அவளிடம் ஏதாவது கதைத்து அதனால் அவளுக்கு மன அழுத்தங்கள் ஏற்பட்டு, அதன் காரணமாக பிற -க்கப் போகின்ற எங்கள் குழந்தைக்கு ஏதும் ஏற்பட்டு விடுமோ என நான் பயந் தேன். எனவே இறுதியில் எனது உம்மாவிடமும், வாப்பாவிடமும், எனது மனைவி பிள்ளைப் பேறுக்காக அவளுடைய குடும்பத்துடன் இருப்பதுதான் பொருத்தமா னது என்பதை பக்குவமாக எடுத்துச் சொல்லி அவர்களை சம்மதிக்கச் செய்தேன். ஆனாலும், அவள் அவ்வாறு செல்வதற்கு பூனைதான் காரணம் என்பதை நான் அவர்களிடம் சொல்லவேயில்லை.

எனது மனைவிக்குப் பிள்ளை பிறந்தவுடன், அவனை மருத்துவமனைக்கே சென்று எனது உம்மாவும், வாப்பாவும் பார்த்தார்கள். செக்கச் செவேல் என்று இருந்த அந்தப் பிஞ்சு உருவத்தைப் பார்த்து அவர்கள் இருவரும் முகம் மலரச் சிரித்தார்கள். வெளி யே வரும்போது உம்மா என்னிடம் சொன்னார்கள், "தம்பி, ஒரு நாளஞ்சி நாள் போன ஒடனே மனிசியயும், புள்ளயயும் ஊட்ட கூட்டி வந்திடுடா. அவனப் பாத்துக்கிட்டே இரிக் கணும் போல இரிக்கிடா" நான் சும்மா தலையாட்டினேன். அது சாத்தியமில்லை என்பது எனக்கு நன்கு தெரிந்திருந்தது. எனினும் அதற்கான தேவை உடனடியாக ஏற்படவும் இல்லை. பிள்ளை பிறந்து ஆறாம் நாளில் என்னுடைய உம்மா மௌத் தாகி விட்டார்கள். அவர்கள் ஒரு தடவையாவது எனது பிள்ளையை கண்குளிரப் பார்த்தார்களே என்பது என்னைப் பெரிதும் ஆற்றுப்படுத்துவதாக இருந்தது.

உம்மாவின் மௌத்துக்குப் பின்னர் எங்கள் வீடு உயிர்த்துடிப்பின்றி உறங்கி விட்டது. நானும் வாப்பாவும் மட்டுமே இருந்த எங்கள் வீடு பெண் வாசனையின்றி வறண்டு விட்டது. வயதான ஒரு தாயின் இழப்பு, இவ்வளவு பெரும் பாதிப்பை ஏற்படுத்த -க்கூடும் என நான் அதுவரைக்கும் நினைத்ததில்லை. அடிக்கடி கேட்கின்ற உரலில் வெற்றிலை இடிக்கின்ற ஒலிகளும், உம்மாவின் இருமல் சத்தங்களும் இப்போது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அற்றுவிட்ட நிலையில், ஒரு இடுகாட்டின் பயங்கர அமைதி எங்கள் வீட்டில் குடி கொண் டது போன்று நான் உணர்ந்தேன். இந்த நிலை மையை தாங்க முடியாத நிலையில், என் மனைவியிடம் கெஞ்சி நின்றேன், "இஞ்ச பார், உம்மா மெளத்தா போனத்துக்குப் பொறவு வாப்பா தனிச்சிப் போய்த் தாங்க. அவங்க வேற யார்ர ஊட்டிலயும் போயிரிக்க மாட்டேன் என்டு சொல்றாங்க. எனக்கு அவங்கள தனிய உட்டுப்போட்டு, இங்க உன்னோட வந்து இரிக்கேலாது. அதால, புள்ளக்கி நாப்பது முடிஞ்ச உடனே நீ நம்மட ஊட்டுக்கு வந்திடு" விருப்பமில்லாத போதிலும், நிலைமையின் சிக்கலை உணர்ந்த வளாக அவள் அரைமனதுடன் எனது முடிவுக்கு, ஒரு நிபந்தனையுடன் ஒத்துக் கொண்டாள்.

"எந்தக் காரணத்தக் கொண்டும் பூன ஊட்டுக்குள்ள வரப்படாது"

நான் பெரும் மகிழ்வுடன் அவளின் நிபந்தனைக்கு ஒத்துக் கொண்டேன். ஒரு வெள்ளிக் கிழமை பின்னேரம், நான் எனது மனைவியுடனும் பிள்ளையுடனும் வீட்டிற்கு வந்த போது, வாப்பாவின் முகம் மலர்ந்து விட்டது. பற்களெல்லாம் விழுந்து விட்ட அவர்க ளின் வாயில் குழந்தைத்தனமான சிரிப்பு விரிந்தது. அதன் பின்னர் வாப்பாவும் அதிக காலம் உயிர் வாழவில்லை. எழுபது ஆண்டுகளாக ஒன்றாக வாழ்ந்த உம்மாவின் மெளத்து அவர்களைக் கடுமையாக பாதித் துவிட்டது. எனது மகனுக்கு ஆறுமாதங்க ளாகிய போது, எனதுவாப்பா மெளத்தாகி விட்டார்கள். இதயம் கனக்க, எல்லாவற்றை யும் முன்னின்று செய்து, வாப்பாவை அடக்கம் செய்து வீட்டுக்கு வந்தபோது, வெறுமையின் ஆழத்திற்குள் மூழ்கிய வனாக நான் இருந்தேன். இரவாகியபோது உறவினர்கள் மட்டுமன்றி, என் உடன் பிறந்தவர்களும் தத்தம் வீடுகளுக்குச் சென்று விட, வரவேற்பறையில் கிடந்த கதிரையில் நான் சலனமற்றுக் கிடந்தேன். மிகச்சிறு வயதில் இருந்து முன்தினம் வரை வாப்பாவுடன் நான் சம்பந்தப்பட்ட நினைவுகள் என க்குள் வந்து சென்றன. சட்டென்று வாசல் கதவை யாரோ தட்டும் ஓசை மெல்லிதாகக் கேட்டது. எழுந்து சென்று கதவைத் திறந்து பார்த்தேன். யாரும் தென்படவில்லை. யோசனையுடன் அங்கும் இங்கும் பார்த்தபோது, "மியாவ்" காலடியில் இருந்து சத்தம் வந்தது. குனிந்து பார்த்தேன். வாப்பாவின் பொட்டப் பூனை. காலையில் இருந்து வாப்பாவை அடக்கம் செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்ததால், இந்தப் பூனை பற்றிய எண்ணம் அறவே எழவில்லை. காலை யில் இருந்து அதற்கு சாப்பாடும் இல்லை. குசி னிக்குள் சென்று, எஞ்சியிருந்த உணவை ஒரு தட்டில் போட்டு, பூனைக்கு வைத் தேன். "மியாவ்" மிகுந்த ஆவலுடன் அது விரைவாக சாப்பிட்டது.

வாப்பாவிற்கு ஏழாம் கத்தம் முடிந்த பின்னர், எனது மனைவி என்னிடம் கூறினாள், "இஞ்ச, இப்ப உங்க வாப்பாவும் இல்லதானே. இந்தப் பூன இனி நமக்குத் தேவையி -ல்லை அத அடிச்சு அனுப்பிடுங்க" ஆனால் அந்தப் பூனைக்கு அடிக்க எனக்கு மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவில்லை. அந்தப் பூனை என் வாப்பாவை எனக்கு நினைவுபடுத்தியது. அதற்கு அடிப் பது என்பது எனது வாப்பாவுக்கு அடிப்பது மாதிரியே இருக்கும். இனி என் மனைவி யுடன் முரண்படவும் நான் விரும்பவில்லை.அடுத்த சனிக்கிழமை காலையில், எனது மனைவியின் தம்பியை எங்கள் வீட்டிற்குவரச் சொன்னேன். கிணற்றுக்குப் பக்கமாக இருந்த மாமரத்தின் கீழ் வாப்பாவின் பூனை படுத்திருந்தது. நான் ஒரு ஈரமான சாக்கை எடுத்துக் கொண்டு மெல்ல அதன் அருகில் சென்று, சாக்கை அதன் மேல் போட்டு. பூனையை அழுத்திப் பிடித்தேன். ஏற்கனவே மனைவியின் தம்பி தயாராக வைத்திருந்த ஒரு நெகிழிக் (பிளாஸ்டிக்) கூடைக்குள் பூனையைப் போட்டு மூடினோம். எனது உந்துருளியின் பின்புறத்தில் அவனை நெகிழிக் (பிளாஸ்டிக்) கூடையுடன் ஏற்றி யவாறு நான் புறப்பட்டேன். பூனையை எங்கு கொண்டு போய் விட்டாலும், அது திரும்பி வீட்டிற்கு வந்துவிடும் என்று சொல்லக் கேட்டிருந்தேன். அதனால் வெவ்வேறு பாதை களால் வளைந்து. திரும்பி இறுதியில் எங்கள் ஊரின் கிழக்கு மூலையால் ஓடுகின்ற ஆற்றிற்கு வந்து சேர்ந்தோம். வழி நெடுகிலும் பூனை ஈனக் குரலில் கத்திக் கொண டிருந்தது. ஆற்றின் இக்கரையில் வள்ளம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதை அவிழ் -த்து கூடையுடன் நாங்கள் ஏறி, வள்ளத்தை அக்கரை க்கு வலித்துச் சென்றேன். அக்க ரையை அடைந்தவுடன், நான் கூடையுடன் இறங்கி, ஒரு கொஞ்சத்தூரம் நடந்து. பின்னர் கூடையை கவனமாகத் திறந்தேன். சட்டென்று பூனையை தரையில் கொட் டிவிட்டு, வேகமாக ஓடிவந்து வள்ளத்தில் ஏறி, அதை மீண்டும் கரையை நோக்கி வேக மாக வலித்தேன். எனக்குப் பின்புறமாக 'மியாவ்...மியாவ்' என பலவீனமான தொனி யில் பூனையின் அலறல் கேட்டுக் கொண்டேயிருந்தது.

நாங்கள் வீடுவந்தபோது, இடுப்பில் பிள்ளையுடன் வாசலில் மனைவி நின்று கொண்டி ருந்தாள். அவளுடைய முகத்தில் ஒரு பிரகாசம் தெரிந்தது. எங்களைக் கண்டவுடன், "என்ன, பூனையை உட்டுட்டீங்களா" என பரபரப்புடன் கேட்டாள். நான் ஆமெனத் தலையை அசைத்தபோது, "எண்ட செல்லம்" என அவள் பிள்ளையைக் கொஞ்சினாள். என் உணர்வுகள் மரத்துப் போயிருந்தன. கதிரையில் அமர்ந்து, தலையை பின்னால் சாய்த்துக் கொண்டேன். வாப்பாவை நினைவுபடுத்திக் கொண்டிருந்த ஓர் உயிருள்ள அடையாளத்தை அகற்றிவிட்டேன். வாப்பாவின் பொக்கைவாய்ச் சிரிப்பு எனக்குள் தோன்றி மறைந்தது. நான் கண்ணீரை அடக்கிக் கொண்டேன். "தம்பி, போய் எறைச்சி யும், ஈரலும் வாங்கி வா. மஞ்சச் சோறு ஆக்குவோம்" என் மனைவி தன் தம்பியிடம் கூறிக் கொண்டிருந்தாள். அவள் சந்தோசமாக இருக்கும்போது, மஞ்சள் சோறு சமைப் பாள். அன்று இரவு மின்குமிழ்களை அணைத்து விட்டு, படுத்தபோது எனக்கு உறக்கம் வரவில்லை. மனதிற்குள் ஏதோ கிடந்து விறாண்டுவது போலிருந்தது. ஒருவேளை வாய்விட்டு அழுதால் நன்றாக இருக்குமோ எனத் தோன்றியது. அருகே மனைவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லிய குறட்டையுடன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தாள். திடீரென்று சமயலறைப் பக்கம் இருந்து ஒரு சத்தம் கேட்டது. அந்த சத்தத்திற்கு என் மனைவியும் விழித்துக் கொண்டாள். "இஞ்ச ஏதோ சத்தம் கேக்குது. பூன வந்திட்டு போல." நான் மெல்ல எழுந்து, ஓசை எழாத வண்ணம் நடந்து, குசினிக்குள் சென்று, ஆளியைப் (சுவிட்சைப்) போட்டேன். இரு காதுகளும் விறைப்புற்று நிற்க, கறிச்சட்டியின் மேல் நின்றிருந்த ஒரு எலி, என்னை விழித்துப் பார்த்து, பின் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, கூரைக்கு இடையே இருந்த இடைவெளிக் கூடாக ஓடி மறைந்தது. என் வாழ்க்கையில் அன்றுதான் எங்கள் வீட்டில் நான் முதன் முதலாக ஓர் எலியைப் பார்த்தேன்.


---

# நானும் அவனும்..

—வசுமதி நிர்மல்—

கானகத்தே ஊடறுக்கும் வழியில்
மனது பாம்பாய் நெளிகிறது.
இறுகிய உணவுப் பிண்டதை
வெளியில் எடுக்கமுடியாதபடி
தவிப்பில் இழைந்துகொண்டிருக்கும்
இன்னொரு புழுவாய் இரவியை
இரட்சித்துக்கொண்டு மெல்ல
விழிக்கிறேன்.
"இன்னும் விடியவில்லையே..."
அதே இரவியை "சோம்பேறி" என்று விட்டு
மீண்டும் துயிலில் உழலும்
ஒரு பாதித் தாமரையாய் இப்போது நான்.
அருகிருக்கும் நெருப்பை
அணைத்தபடி துயிலும் என்னை
உச்சி முகரும் அவனைக் கண்டு
மீண்டும் விழித்தலில்,
எனக்கான மலர்தல்
நண்பகலைக் கடந்திருப்பதைச் சொல்லாமல்
அவன் எங்கே சென்றருப்பான்?
நனைந்த கூடுகளையும்
நனையாத வீடுகளையும் உலர்த்தி விட்டு
என்னைப் பார்த்து கண் சிமிட்டி
கேலி செய்கிறான்.
என்னவோ புரிந்து சிவக்கும்
என் கன்னங்களை விரல்களால் வருடிவிட்டு
வெறுமனே "கள்ளி" என்கிறான்.

ஒவ்வொரு பதர்களையும்
கதிர்களாக்கும் விந்தை கண்டே
அவனை இன்னும் இன்னும் காதலிக்கிறேன்
என்பதே இந்த இயலாத
இயக்கத்தின் அணிச்சைப் புள்ளி.
என்னையும் அலர்த்தி..
அவர்களையும் மலர்த்தி..
எல்லோருக்கும்..
எல்லாம் உணர்த்தி..
எண்ணம் தளர்த்தி..
எங்கு தான் செல்கிறான்
இன்னும் இன்னும்?
கூடிக் கழித்து மீண்டும்
ஊடல் செய்யும் ஒவ்வொரு பட்சிக்கும்
இரகசிய தூது செல்கிறான்..
என் கதிர் "அவன்".
இன்னும் விடியாத அதே கனவுக்குள்..
நானும் அவனும் மட்டுமா?
ஆயிரமாயிரம் அற்புதங்களை
அள்ளிக்கொண்டு
இரசிகர்களாய் நீங்களும் தான்..!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுயம் எல்லை கடத்தல் !

சம்பூர் வதனரூபன்

உழிகளில் ஆதியில் அமுத கடல்
உப்பைத் தொலைத்திருந்தது.
என்னிடமிருந்த கொஞ்சத்தையும்
கரைத்துவிட்டு வந்தேன்.
கூட்டத்தில் தொலைந்த மீன்
நன்றி சொல்லிப் போனது.
நதிகளின் புணர்வாய் பிரவாகிக்கின்றது
என் மீழெழல்.
கடல் மீதான நதியின் மீறல்
சுகமான சுயமிழத்தல்.

இதில் கடலின் அதிகாரத்தை
எங்கென்று நிறுவுவது.
அது சிலபொழுது கரைமீறும்
பொங்கிப் பூதமாகும்
முந்தும் பெருங்கடலை புணரும்
தனக்குள்ளும் அடங்கும் ஆறும்.
எனினும் ஆற்றுவாய் சப்புதலில்
பொங்கி வழியும் நுரைகளைப் பூசி
உயிர்க்கும் தக்கை மீன்களை
வெண்புள்ளின் அலகில் கோதி
பேரலை வீசியழித்து ஓயும்.
எறியப்பட்ட அலுமினிய ஏந்திகளை
பொறுக்கியவனின் முகத்தில்
போதையின் வண்ணம் அப்பித் ததும்ப
போதைத் திராவக ஆதிக்கம்
சிலநொடி மூத்திரத் தெறிப்புடன் முற்றும்.
எனினும் வெற்றுத் திண்மங்களின்
வேண்டுகை
மற்றொரு திராவகத்துக்கான துமிவரை
நீளும்.

♦♦♦



# கனக...

கடற்கரப்பொடியன்

எனக்கு இரவொன்று வேண்டும்
பகலைக்கருக்கி இருளை மலர்த்தி
விடியாத இரவொன்று வேண்டும்.
ஒளியின் நிர்வாணம் களைந்து
அந்தகாரம் குழைத்து ஆடையாய்ப்பூசி
ஆகாய முகட்டில் அமர்ந்துகொள்ள
வேண்டும்
ஒற்றை இறகை உதிர்த்து
காற்றில் காவியம் வரைய அல்ல,
கற்றை ஒளியில் கனவுகலைத்தவன்
காக்கையா? கான மயிலா?
கானகத்துக் கோழியா--இல்லை
கழுகுதானா என்று கண்டுணர்ந்து
மீண்டும் புதுக் கனவுகள் நெய்திட.
இறக்கை கோதி
அலகு தீட்டி விழித்திருப்பது
அகால வேளையில் அலறுவதற்கல்ல,
பலபத்தாண்டுகளாய் அமிழ்ந்து கிடந்த
பயக்குகையின் திரை கிழித்து,
உயரே எழுந்து, காற்றில் அலைந்து,
மலை முகட்டில் அமர்ந்திருந்து,
பேரிகை கொட்டிக் கெக்கலித்திட.
எனக்கு விடியாத இரவொன்று வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "நம்மட முற்றம்"


திருமதி. மரிளியா சக்காப்
அதிபர்
திருகோணமலை


திறன் பேசி வந்த பிறகு முற்றத்தில் ஓடியாடி
மகிழ்ந்திருந்த தருணம் மறந்து போச்சு.......
மனசும் வெறுமையாச்சு.

திறன் பேசி வந்த பிறகு நண்பர்களோடு...
பல மணி நேரம் பேசிக் கழித்த......
அழகிய நாட்கள் அருகியே போச்சு......

திறன் பேசி வந்த பிறகு கடற்கரை மணலில்
கால் புதைத்து நடந்த
பொன்னான நேரங்கள்
பொய்யாகிப் போச்சு......
ஏக்கங்கள் தான் மீதமாச்சு......

திறன் பேசி வந்த பிறகு உறவினரோடு
உண்டு மகிழ்ந்த காலங்கள்......
ஞாபகமாக மீட்டிப் பார்க்கின்ற
கதையாச்சு......
சொந்தங்கள் தூரமாச்சு......

திறன் பேசி வந்த பிறகு தோழிகள் பலர்
சேர்ந்தாக்கிய கூட்டாஞ்சோறு......
உண்மையற்று தூரமாகிப் போயாச்சு......

திறன் பேசி வந்த பிறகு பயன் தரும்
உணவுப் பண்டங்களெல்லாம்
புதுப்புது தயாரிப்பாகி
உடம்புக்கு கேடாச்சு......
காசும் கரியாச்சு......

திறன் பேசி வந்த பிறகு
பாரம்பரிய விளையாட்டெல்லாம்
பாழாகிப் போச்சு......

நம்மட முற்றத்தில் நாம் கழித்து மகிழ்ந்திட்ட
காலம் மீண்டும் வராமலா போயிடும்......
நாம் கடந்து வந்த அந்த இனிமையான
நாட்களில்......

திறன் பேசியில்லாமல் திளைத்திருந்த
உன்னதத் தருணங்கள்
வரமாக இனி வருமா......



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# 13 ஆவது திருத்தச் சட்டம்....

முனைவர்.இ.ஸ்ரீ ஞானேஸ்வரன்

ஸ்ரீலங்காவின் அரசியலமைப்பில் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக உருவாக்கப்பட்ட ஒரேயொரு இணைப்பாகக் காணப்படுவது 13 ஆவது திருத்தச் சட்டமாகும். இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் வாயிலாக இப்பதின்மூன்றாம் திருத்தச்சட்டம் ஸ்ரீலங்காவின் அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டது.

ஸ்ரீலங்காவின் முதலாவது குடியரசின் அரசியலமைப்புச் சட்டமானது 1972 இல் உருவாக்கப்பட்டபோதும், பின்னர் 1978 இல் இரண்டாவது குடியரசின் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபோதும் அவற்றின் அகவிதி 2 "ஸ்ரீலங்கா குடியரசானது ஒற்றையாட்சியைக் கொண்டது" என தன்னைத் தெளிவாக வடிவமைத்துக்கொண்டது.

இந்த ஒற்றையாட்சித் தத்துவத்தின் கீழ் அதிகாரங்களை இழந்து தமது தேசிய இன அடையாளத்தை இழக்க நேரிட்ட அபாயத்தை வடக்கிலும் கிழக்கிலும் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்கள் எதிர்கொண்டனர். அந்த அபாயத்திலிருந்து தம்மைப் பாதுகாக்கவே அவர்கள் போராட்ட அரசியலை ஆரம்பத்தில் முன்னெடுத்தனர். எனினும் அப் போராட்ட அரசியலின் தலைவர்களே அரசியற் போராட்ட வடிவத்திலிருந்து ஆயுதப் போராட்ட வடிவத்தைத் தமிழ் மக்கள் கையிலெடுக்க வேண்டியிருந்ததனை வெளிப்படுத்தியிருந்தனர்.

1980களில் தமிழ்த் தேசியமானது ஒன்றிணைந்த நாட்டுக்குள் உயிர்வடிவமெடுக்கப் போவதில்லை என்பதை உணர்ந்துகொண்ட தமிழர்களின் அரசியல் போராட்டம் தனிநாடு தம்மைப் பாதுகாக்கும் என்பதைக் கருத்திலெடுத்து தமிழீழத்திற்கான தீவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதப் போராட்டமாகத் தன்னைத் தகவமைத்துக்கொண்டது. ஆயுதப் போராட்டளம் அதன் உச்சங்களைத் தொட்ட காலப்பகுதிகளில் ஒன்றான 1987 காலப்பகுதிகளில் பூகோளப் போட்டியின் முக்கிய புள்ளியாக விளங்கும் ஸ்ரீலங்காவில் தனது கால்களைப் பலமாக ஊன்றிக்கொள்ள இந்தியா தயாரானது. இதேவேளை தனது படைகளுக்குச் சற்றேனும் ஓய்வுதரவும், இதுவரைகாலம் ஆயுதப் போராட்டத்திற்கு நேரடியான உதவிகளை வழங்கிவந்த இந்தியாவிற்கும் தமிழரின் ஆயுதப் போராட்ட மேலாண்மை வலுவுக்கும் இடையே மோதலை உருவாக்கவும் ஸ்ரீலங்கா திட்டமி -ட்டது. இவ்விரு நாடுகளினதும் திட்டங்கள் சந்தித்த புள்ளியாக ஓர் ஒப்பந்தம் உருவானது. ஸ்ரீலங்காவில் சமாதானத்தையும் சாதாரண வாழ்நிலையையும் ஏற்படுத்தும் முகமாக ஸ்ரீலங்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலே 1987 ஜூலை 29 ஆம் திகதியன்று அவ் ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டது. அவ்வொப்பந்தத்திலுள்ள சரத்துக்களை செயற்படுத்தும் முகமாகப் பதின்மூன்றாம் திருத்தம் ஸ்ரீலங்காவின் அரசியலமைப்பில் உருவாக்கப்பட்டதுடன், அதற்கும் மேலதிகமாக 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டமும் நொவம்பர் 14, 1987 இல் பிரயோகத்திலிடப்பட்டன.

இந்திய ஸ்ரீலங்கா ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கங்களை அதன் 1.1 தொடக்கம் 1.5 வரையான பிரிவுகளில் காணலாம். அவையாவன,

1.1 ஒன்றிப்பும் சுயநிர்ணயமும் ஆள்புலக்கட்டுறுதியும் பாதுகாக்கப்பட வேண்டும். ஸ்ரீலங்காவானது பல்லின, பல்மொழி, பன்மைத்துவ சமூகங்களைக் கொண்ட நாடு என்பதனை ஏற்றுக்கொள்வது.

1.2 ஓர் இனத்திற்குச் சொந்தமான பண்பாட்டு மொழியியல் அடையாளங்களை ஏற்றுக் கொண்டு அவற்றைக் கவனமாக பாதுகாக்க வேண்டும்.

1.3 தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுக்கால வாழ்விடமாக வடக்கும் கிழக்கும் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் அப்பிரதேசங்களில் அவர்கள் ஏனைய சமூகங்களுடன் இணைந்து வாழ்கின்றார்கள் என்பதையும் ஏற்றுக்கொ ள்வது.

1.4 1.1. மற்றும் 1.2 இல் கூறப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்தும் முகமாக அனைத்துக் குடிமக்களும் சமத்துவம் பாதுகாப்பு மற்றும் சமானமாக தம் அபிலாசைகளைப் பூர்த்திசெய்து வாழ வழிசமைக்கப்பட வேண்டும்.

இந்த விடயங்களை அரசியலமைப்பின் ஊடாக உறுதிசெய்துகொள்ள உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் அதிகாரங்களைப் பகிர்வதற்குப் பதிலாக அதிகாரங்களை பரவலடையச் செய்யும் ஏகபோக உரிமையை ஸ்ரீலங்காவின் மத்திய அரசிற்கு உருவாக்கியது. ஏனெனில் ஒற்றையாட்சிக் கட்டமைப்பினை வலுப்படுத்தும் ஸ்ரீலங்கா வின் அரசியலமைப்பில் அதிகாரங்களைப் பகிர்வதென்பது சாத்தியமற்ற-



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாகவே காணப்படுகின்றது. இப் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஏற்கனவே 1978 ஆம் ஆண்டிலிருந்து வலுவில் இருக்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் பின்வரும் சரத்துக்களில் மாற் றங்களும் உள்ளீடுகளும் மேற்கொள்ளப்பட்டன. அதன் சுருக்கம் வருமாறு.

1. அகவிதி 18 இல் பின்வரும் விடயங்கள் உள்ளீடு செய்யப்பட்டன.
   a. தமிழும் உத்தியோகபூர்வ மொழியாகும்
   b. ஆங்கிலம் இணைப்பு மொழியாகும்
   c. இவற்றினைச் செயற்படுத்த நாடாளுமன்றத்தில் சட்டமியற்ற வேண்டும்
2. அகவிதி 138 இல் நீதிமன்றம் தொடர்மான உள்ளிடுகையும்.
3. அகவிதி 154 இல் அத்தியாயம் XVII A மாற்றங்களும் 154 A தொடக்கம் T வரையான உள்ளிடுகைகளும் மேற்கொள்ளப்பட்டன. (பின்னர் விரிவாக நோக்கப்படும்)
4. அகவிதி 155 இல் அரசியலமைப்பின் முந்தைய விதிகளில் உள்ளவையும் 9 ஆவது பட்டியலில் தெரிவிக்கப் பட்டவற்றிலுள்ளவற்றையும் பிரயோகத்திலுள்ள பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தினையோ, பிரயோகத்திலுள்ள பொதுப் பாதுகாப்பை உறுதிசெய்யும் அவசரகாலச் சட்டங்களையோ, உருவாக்குவதைத் தடை செய்வதோ, தவிர்க்கவோ அல்லது மாற்றம் செய்யவோ அனுமதியில்லை என்பது இணைக்கப்பட்டது.
5. அகவிதி 170 இல் "மாகாண சபைகளின் விதிகள் மற்றும் கட்டளைகள்" என்ற வசனம் சேர்க்கப்பட்டது.
6. இறுதியாக அப்போதுவரை அரசியலமைப்புச் சட்டத்தின் இணைப்பாக இருந்த ஏழு பட்டியல்களுடன் எட்டாவது மற்றும் ஒன்பதாவது பட்டியல்கள் இணைக்கப் பட்டன.

இவை தொடர்பான விரிவான பார்வையைத் தொடர்வோம் நண்பர்களே!

தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரணி போகுது..

ஊரணி மக்கள் ஒருகுடைசேர்ந்து
பேரணியாக பெரும்படையாகுது
காரணி யாரென காரணம் கேட்டு
தேரணி தேரரும் தேசிங்கராஜரும்
போரணி திரட்டி போடுகிறார் கூச்சல்.

பாரணி இங்கே பார்க்கக் கிடைத்தது.
நாரணியாக தொடரும் பூக்களை
சீரணி செய்ய சிறப்புகள் கூடும்
தோரணி தோரணம் தொடருந்தாகி
வேரணி பிடுங்கி மரத்துடன் போகுது.

ஏரணியாக எருதுகள் போனபின்
தாரணிதமீதொரு தனிப்படை செல்லுது
நேரணியாக மோதிட முடியா
சூரணி சூரணம் செய்து கொடுக்க
பூரணி பூண்டு புறப்பட்டுப் போகுது

யாரணி இவர்கள் யாரணி யெனவே
தூரணி ஒன்று துளாவிக் கேட்டிட
மாரணி மாறனை கேட்டுப் போகுது
சாரணி சார்ந்து ஆதரவு திரட்டியே
தீரணி தீர்வினை தீரெனக் கேட்குது

வடக்கில் இருந்து கிழக்கு நோக்கியே
கடப்புகள் கடந்து நடையணி போகுது
கிடப்பில் கிடந்த உண்மை வெளிவர
முடக்கும் திட்டம் முடங்கிப் போயிட
வடக்கலிருந்து கிழக்கே போகுது.....

♦♦♦

செ. ஞானராசா

# உச்சிக்கொட்டு!

க. ஷியா

திமிறி எழும்
நினைவுகளை
நகப் பொட்டாய் வெட்டி
வீசத்தான்
எத்தணிக்கிறாய்
வெறுமையான
அறையொன்றில் அப்பிக்
கொண்ட
ஒன்றை ஆன்மாவைத்
தவிர
எல்லாம் வெற்றிடம்....

களிறுண்ட கோதுகள்
போல்
நொறுக்கி வீசுகிறேன்
பல்லிகள் முளைத்து
சுவர்களில் பாடு கீதம்
வரையப்பட்டிருந்தது
எச்சங்களால் குற்று
வைத்திருக்க
வேண்டும்....

மீட்டிப் போகையில் லகற
ஓசைகள் பிளக்கிறது

ஈர்க்குவால் கிண்டப்படும்
நகப் பிளவுகளில் பீறிடும்
ஆன்மா விழுகிறது
அவைகளுக்கு
காக்கையின்
அலகு விரதம் துடைத்து
மாமிச மலம் பீச்சுகிறது

கீதம் இறந்த
பொழுதொன்று அது
துருப்பிடித்த வயலின்
அறுவதாய்
நினைக்கிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரிசு

ஏ. நஸ்புள்ளாஹ்



கொழும்பு நகரத்தில் உள்ள தனியார் மருத்துவமனை நவ லோகா அப்துல்பேலா கோபத் திலும் விரக்தியிலும் தலையில் உள்ள கட்டுகளைக் கிழித்தான். நெற்றியில் ஏற்பட்ட காயத்தில் இருந்து குருதி வழிந்தது. முந் தின நாள் மருத்துவர் அல்தாப் பாத்திமா அதைச் சுற்றி பேண் டேஜ் போட்டிருந்தார். அப்துல் பேலா மருத்துவரின் மருந்தகச் சாலையில் அமர்ந்து, சுவரில் தொங்கிக் கொண்டிருந்த மனித உடற் கூற்றியல் விளக்கப்படங் களைப் பார்க்காமல் பார்த்தான். முள்ளந்தண்டு வரை படத்தால் ஆதரிக் கப்படும் மனித எலும்பு அமைப்புகளைக் காண்பிக்கும் ஒன்று இருந்தது.

மருத்துவரின் கண்கள் அப்துல்பேலாவின் பார்வையைத் தொடர்ந்தன. "அந்த முக்கி யமான இடங்கள் எதிலும் நீங்கள் காயமடையாததற்கு கடவுளுக்கு நன்றி" என்று மருத்துவர் அல்தாப்பாத்திமா சிரித்துக் கொண்டே கூறினார். "இது சிக்கலான விடயங் களைக் கொண்டிருக்கலாம். ஒரு வாரத்திற்கு கட்டுகளை கழற்ற வேண்டாம். அதுசரி, இந்த காயம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது? உங்களை யாராவது அடித்தார்களா?" "அந்த நபர் மருத்துவரா அல்லது காவல்துறையா?" அப்துல்பேலா கலக்கமடைந் தான். உறுதி யான பதிலை யோசிக்க முடியாமல் அமைதியாக இருந்தான். அப் துல்பேலாவின் தலையில் மட்டும் அடிபடவில்லை, அவனது விதியே பலமாக அடி பட்டது. தலையில் ஒரு காயம் குருதியை வெளியேற்றுகிறது. ஆனால் ஒருவரின் விதி யில் ஏற்பட்ட காயத்திலிருந்து சிந்தும் குருதி எப்போதும் கண்ணீராக வெளியேறு கிறது. தலையில் ஏற்பட்ட காயம் சரியான நேரத்தில் குணமாகும். ஒரு காயப்பட்ட விதி எல்லா குணப்படுத்துதலுக்கும் அப்பாற்பட்டது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அப்துல்பேலா அந்த காயத்தை அவனுடைய விதியில் ஏற்படுத்தியிருந்தான். பழியை மாற்ற அவனுக்கு வேறு யாரும் இல்லை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் மாங்கலிகா மருத்துவமனையில் ஒரு மாலைப் பொழுதில் இருளில் மூழ்கியிருந்த காட்சியை அவனால் தெளிவாக நினைவுகூர முடிந்தது. மின் தடை ஏற்பட்டது. இரண்டு சோடிக் கைகளின் நிழல்கள், ஒரு பெண்ணினதும் ஓர் ஆணினதும் நிழல்கள், இரகசியமாக ஒரு பரபரப்பான செயலில் இறங்குவதை அவன் இன்னும் பார்க்க முடிந்தது. பின்னர் இருவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். தடிமனான உறையை நீட்டியிருந்த ஆணின் கையையும், அந்தப் பெண்ணின் கை அதைப் பற்றிக்கொள்வதையும் அவனால் பார்க்க முடிந்தது. அவளது நம்பிக்கையான உரையாடலை கேட்க முடிந்தது.

“நீங்கள் இனிப்புகளை விநியோகிக்க வேண்டிய நேரம்...” அப்துல்பேலா அவன் உள்ளங்கைகளைப் பார்த்தான். அவன் மீது இரத்தக்கறை இருந்ததா? இருபத் தைந்து வருடங்களுக்கு முன்பு அவனுடைய உள்ளங்கையில் படிந்த அதே குருதியா? அது எப்படி சாத்தியமானது? விலையுயர்ந்த திரவ சோப்புகளால் ஒரு நாளைக்கு
பல முறை கைகளைக் கழுவவில்லையா? அப்படியென்றால் குருதிகுரிய அந்தக்காயங்கள் எங்கிருந்து வந்தன? அவன் யாரையும் கொலை செய்யவில்லை என்பது அவருக்குத் தெரியும். அப்படியானால் அவன் கைகளில் ஏன் குருதிக்கறை படிய வேண்டும்? தன்னைத்தானே குற்றம் சாட்டும் கேள்விகளால் அவன் தன்கைளில் முகம் புதைத்து அழுதான். “ஆம், நீ ஒரு கொலைகாரன்! நீ யாரோ ஒருவரின் நம்பிக்கையைக் கொன்றுவிட்டாய். அவன் இதயத்தில் ஓர் அலறல் எழுந்தது, அப்துல்பேலாவைத் திடுக்கிட வைத்தது. அந்த மெல்லிய இருளில் அப்துல்பேலா மீண்டும் ஒருமுறை அவன் உள்ளங்கைகளை உற்றுப் பார்த்தான். குருதிக்கறைகள் அச்சமூட்டும் வகையில் புதியதாகத் தெரிந்தன. ‘சதையும் குருதியும் கொண்ட ஓர் உயிரினத்தை நீ கொல்லும் போது குருதிக்கறைகள் மறைந்துவிடும். ஆனால் ஒருவரின் நம்பிக்கையை நீ கொல்லும்போது அவை வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்’. விழிகளிலிருந்து கண்ணீர் அவன் கண்களைப் நிரப்பியது. யாரும் தன்னைப் பார்க்கவில்லை என்பதை உறுதிப் படுத்த அவன் ஒரு விரைவான பார்வையை வீசினான்.

அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். நள்ளிரவு தாண்டியிருந்தது. அவரது மனைவி ரானா லியாகதுக்கு இப்போது உடல்நிலை சரியில்லை என்று கவலைப்பட வேண்டும். அவனுடைய கைபேசியில் அவனைத் தொடர்புகொள்ள அவள் தீவிரமாக முயற்சி செய்து கொண்டிருக்கலாம். அப்துல்பேலா அதை வேண்டுமென்றே வீட்டில், முன்னறையின் நடுவில் உள்ள மேசையில் வைத்துவிட்டான். இப்போது அவனுக்கு கைப்பேசி தேவையில்லை, அவன் இருட்டுக்குள் இருக்க முடிவு செய்தான். அவனது எண்ணங்கள் அந்த துயர்நிறைந்த மாலையை நோக்கிச் சென்றன. உண்மையைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வதானால், அந்த மாலையில் நடந்ததை அவன் ஒருபோதும் மறக்கவில்லை, அந்த நேரத்தில் அதன் நினைவகத்தை அழித்துவிடும் என்றும் அந்த சம்பவம் என்றென்றும் இரகசியமாக இருக்கும் என்றும் அவன் உறுதியாக உணர்ந்தான். அவனது மனைவி ரானாலியாகதுக்கோ அல்லது ஹீராஜைனபியின் பெற்றோரு -க்கோ என்ன நடந்தது என்பது பற்றி சிறிதும் புரியாததால், அவர் நம்புவது சாதகமா னதாகவும் இருக்கும் "ஹீரா ஜைனபி" அந்தப் பெயர் உடனடியாக அவனது நினைவி -ற்கு ஒரு பெண் குழந்தையின் ஒரு சோடிக்கபடமற்ற கண்களைக் கொண்டு வந்தது. தாதி றஹீம் ஜிப்ரானிடம், செய்வதைத் தடுக்க முயல்வது போல், மணிக்கட்டில் இருந்த அடையாளக் குறியைக் கழற்றி, ஆண் குழந்தையின் கையைச் சுற்றிச் சுழற்றிய போது, அவளின் கையைத் தன் சிறு விரல்களால் தொட்டதாகச் சொன்னாள். அப்துல் பேலாவின் கண்கள் கண்ணீரால் கசிந்தன.

"நான்தான் உண்மையான குற்றவாளி." அப்துல்பேலா தனிமையில் பேசினான். "நான் தேவதையை கைவிட்டு, ஓர் அரக்கனை என் வீட்டிற்குள் கொண்டு வந்தேன். நான் செய்த பாவத்திற்கான தண்டனையை நான் பட்டறிய வேண்டும். ஒரு சரக்கு ரயில் நடைசாலையை கடந்தது. என்ன தவறு நேர்ந்தது அப்துல்பேலா அதைப் புதிர் செய்யத் தவறிவிட்டான். அவனும் அவனது மனைவியும் தங்கள் மகப்பேறு பொறுப்புகளை நிறைவேற்றுவதில் ஒருபோதும் அலட்சியமாக இருந்ததில்லை. அவர்கள் தங்கள் மகனை ஒழுங்காக வளர்க்க தங்களால் இயன்ற அனைத்து முயற் சிகளையும் செய்தனர். பள்ளி மற்றும் கல்லூரிகளில் அவனை சிறந்த முறையில் சேர்த்தனர். அவர்களின் அனைத்து முயற்சிகளும் இப்போது வீணாகிவிட்டதாகத் தெரிகிறது. அவன் தலை கனத்தது. தொடருந்து கிடைத்தளத்தின்(Platform) ஒப்பீட்டளவில் இருண்ட மூலையில் இருந்த நீளமான இருக்கையில் அப்துல்பேலா அமர்ந்தான். முதல்நாள் தன் மகன் அபுயஹ்யா துடுப்பாட்ட மட்டையால் தலையில் பலமாக அடித்தான். ரானாலியாகத் சத்தமாக கத்தியதால்தான், மட்டையின் கைப்பி டியில் அவனது பிடி தளர்ந்தது. மற்றும் அதன் நோக்கம் கொண்ட சக்தியை அந்த அடி இழந்தது. அப்படி இல்லாமல் இருந்திருந்தால், அபுயஹ்யா மட்டையைக் காட்டி மிரட்டிய விதம், அப்துல்பேலாவுக்கு அந்தச் சம்பவத்தை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அவனது தலை வெடித்திருக்கும்.

"உன் மீது அந்தப் பெண் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையா? உன்னால் எப்படி இந்த நிலைக்கு இறங்க முடிந்தது?" என்று உரத்த குரலில் அப்துல்பேலா கத் தித் தொலைத்தான். அப்துல் பேலா ஒரு தந்தையாக அவ்வாறு செய்ய அவனுக்கு முழு உரிமை உண்டு என்று நம்பி இவ்வளவுதான் கேட்டிருந்தான் ஆனால் பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் எதிர்வினை திகைப்பூட்டுவதாக இருந்தது. அவனது இருபத்தைந்து வயது மகன் படுக்கைக்கு அடியில் இருந்த துடுப்பாட்ட மட்டையை வெளியே இழுத்து தந்தையை அடித்தான். 'இந்தச் சம்பவத்தை நரகத்திற்கு!" வேதனையாய் யோசித்தான். அவனுக்கு நினைவு திரும்பியது அவன் மனசாட்சியை கவ்வியது. இது ஓர் அதிரடிப் பதில் போல இருந்தது. அவன் மீண்டும் கொழும்பில் உள்ள மங்கலிகா மருத்துவமனையில் இருந்தான். அவனது மனைவியும் அஜ்மல்கட்டகின் மனைவியும் தலா ஐந்து நிமைய இடைவெளியில் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தனர். அவனுடைய மனைவிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அஜ்மல்கட்டகிற்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அஜ்மல் கட்டக் தனது மனைவியின் பிரசவத்தின் போது மருத்துவமனைக்குச் செல்ல முடியவில்லை. அவள் தொழிலாளர் அறையில் படுக்கையில் கிட்டத்தட்ட தன்நினைவின்றி கிடந்தாள். பல ஆண்டுகளாக இரகசியமாக வளர்த்து வந்த ஒரு நச்சரிக்கும் ஆசையை நிறைவேற்ற, சூழ்நிலையை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டான் அப்துல்பேலா. அங்கு பொறுப்பில் இருந்த தாதியிடம் கையூட்டுக் கொடுத்து குழந்தைகளை மாற்றினான். தாதி, மறுத்தாள் தனது பகுத்தறிவால் மிகவும் வற்புறுத்தினான். "அந்தக் குழந்தை ஓர் ஆண் தேவதை போல் அழகாக இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மகன். ஒரு மகள் அந்த இடத்தைப் பிடிக்கவே முடியாது. இந்த சந்தர்ப்பத்தை தனக்குச் சாதகமாக பயன்படுத்திய அவன் முதலில் யோசித்து திடுக்கிட்ட அப்துல்பேலா, தனது சொந்த மனசாட்சியுடன் விவாதித்தான். மருத்துவர்கள் தீர்ப்பு அளித்துள்ளனர். அவனது மனைவிக்கு மீண்டும் குழந்தை பிறக்க வாய்ப்பில்லை. சோதனையும் பயமும் அவனது மனசாட்சியை மீறியது. அவனுக்கு சொந்தமாக ஒரு மகன் இல்லா விட்டால் அவனது புடவை விற்பனைத் தொழிலை யார் எடுப்பார்கள்? அவன் கட்டியெழுப்பிய புடவை வணிகப் பேருலகம் அவனது மறைவுக்குப் பிறகு மண்ணாகிவிடும். தனக்கு மகன் இல்லையென்றால் குடும்பத்தை யார் கடைசிவரை கவனித்துக் கொள்வது? பயங்கரமானதும் சாத்தியமானதுமான கேள்விகள் பற்றிய பயம் அவனைப் பற்றிக்கொண்டது.

"நீங்கள் கவலைப்பட வேண்டாம்," தந்திரமான தாதி அவரது மனதைப் படித்தது போல் உறுதியளித்தார். "உங்கள் எண்ணங்களை நான் அறிவேன். எல்லாவற்றையும் துல்லியமாகச் செய்ய முடியும். ஆனால் பதிலுக்கு நீங்களும் என்னைக் கவனித்துக் கொள்ள வேண்டும்". அப்துல்பேலா, ஒரு இயந்திரம் போல நகர்ந்து, தனது நீளக்காற் சட்டைப் பையிலிருந்து ஒரு கனமான உறையை வெளியே கொண்டு வந்து தாதியின் பேராசை கொண்ட கையில் கொடுத்தான். அவள் வெளியே சென்ற சிறிது நேரத்தில் அப்துல்பேலாவின் மனைவிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது என்ற செய்தி மங்கலிகாமருத்துவமனை முழுவதும் பரவியது. இரண்டு பெண்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் பிரிவுக்கு மாற்றப்பட்டனர் மற்றும் ஒரு வாரம் மருத்துவமனையில் இருக்க வேண்டியிருந்தது. எட்டாவது நாள் அப்துல்பேலா தனது மனைவியையும் குழந்தையையும் மருத்துவமனையில் இருந்து வெளியேற்றுவதற்கான மருத்து வமனை சம்பிரதாயங்களை நிறைவேற்றிக் கொண்டிருந்தபோது. அஜ்மல்கட்டக் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் செல்வதைக் கண்டான். அஜ்மல்கட்டக் மிக வும் மகிழ்ச்சியாக காணப்பட்டான், மேலும் அவன் முகத்தில் எந்தவிதமான ஏமாற் றமோ ஐயமோ சிறிதளவு கூட இல்லை. அப்துல்பேலாவின் இதயத்தில் நிம்மதி அலை பாய்ந்தது. என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது, அவன் நன்றியுடன் நினைத்தான்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் மாங்கலிகா மருத்துவமனையில் நடந்த அந்த சம்பவத்தை நான்கு சோடி கண்கள் மட்டுமே பார்த்தன. நான்கு சோடிக் கண்களில் இரண்டு சோடிக் கண்கள் புதிதாகப் பிறந்த ஒரு சோடிக்குச் சொந்தமானது. அவர்கள் பார்த்ததை வெளிப்படுத்தும் திறன் அல்லது புத்திசாலித்தனம் அக்குழந்தைகளுக்கு இல்லை. மூன்றாவதுசோடி நாடகத்தில் மிக முக்கியமான பாத்திரத்தில் நடித்த புத்தி சாலித் தாதி தீபிகா. அவள் ஐந்தாண்டுகளுக்கு முன்பு சாவடைந்ததால் உலகத்தை விட்டு வெளியேறினாள் என்பதை அப்துல்பேலா அறிந்திருந்தான். உயிருள்ள ஒரே சோடிக்கண்கள் அப்துல்பேலாவினுடையது. அன்று மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய அவன் மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தபோது, இரு குழந்தைக ளின் எதிர்காலத்தையும் அவன் கற்பனை செய்தான்.

அஜ்மல்கட்டகின் மகள், பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற கடுமையாகப் பே- ாராடி, அரசுக் கல்லூரிக்குச் செல்வாள் என்று நினைத்தான். அவள் எப்படியாவது இளங்கலைமாணி பட்டத்தைப் பெறலாம், அதுவே முடிவாக இருக்கும். மூத்த/ கீழ்நிலை எழுதுனராக அவன் பணிபுரிந்த அந்த அலுவலகத்தில் அவளது தந்தை அவளுக்கு ஒரு பொருத்தத்தைக் கண்டுபிடித்து, அவனது மகளுக்கு திருமணம் செய்து வைப்பான். அஜ்மல்கட்டகின் மகளின் கதி அதுவாக இருக்கும். ஆனால் அவனது மகன் வெற்றிப் படிக்கட்டுகளில், ஓயாமல் ஓடிக்கொண்டே இருப்பான். அவன் தனது மகனை அமெரிக்காவில் உள்ள புகழ்பெற்ற வாஷிங்டன் பல்கலை- லக் கழகத்திற்கு அனுப்புவான். அப்துல்பேலாவின் வணிகப் பேரரசு விரிவடைந்து கொண்டே இருக்கும். அவன் தனது மகனுக்கு அதிகாரத்தில் இருக்கும் ஓர் அரச- ியல்வாதியின் மகளுக்கு திருமணம் செய்து வைப்பான். வெல்ல முடியாத வணிகப் பேரரசைக் கட்டியெழுப்புவதற்கு அரசியல் மற்றும் வணிகத்தின் இணைப்பு ஒரு தவ- ிர்க்க முடியாத காரணி என்பதை அப்துல்பேலா அறிந்திருந்தான். அதன்படி, ஆளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியின் முக்கிய அமைச்சரான அஹமத்ஹசன் டானியின் மகளுடன் தனது மக னின் திருமணத்தை நிச்சயித்தான். மணமகளாக இருக்கும் அவள் லண்டன் பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையில் பட்டம் பெற்றிருந்தாள். அப்துல்பேலா தனது மகனுக்கு திருமண முன்மொழிவின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது அறிவித்து வந்தான். முதற்கட்ட பேச்சுவார்த்தை முடிந்ததும், வரப்போகும் மணம கனைப் பார்ப்பதற்காக வருங்கால மணமகளின்பெற்றோர் மற்றும் உறவினர்கள் அப்துல்பேலாவின் வீட்டிற்கு வந்தனர். மோதிரம் மாற்றும் சடங்கும் நடத்தப்பட்டது. அவனது மகன் ஆலிஸ்ஃபைஸிம் மனைவி சலிமிபாத்திமாவும் மணப்பெண்ணின் வீட்டிற்குச் சென்று விழாவின் சம்பிரதாயங்களை நிறைவேற்றினர்.

அப்துல்பேலா, அஜ்மல்கட்டகின் மகளைக் கண்காணித்து வந்தான். அப்துல்கட்டக் மற்றும் அவனது குடும்பத்தினர் பற்றிய ஒவ்வொரு செய்திகளையும் சேகரித்தான். அஜ்மல்கட்டக் தனது மகள் பிறந்த உடனேயே கண்டிக்கு வேலையை மாற்றிக் கொண்டு வந்துவிட்டான் என்பது அவனுக்குத் தெரியும். அப்துல்பேலா நிம்மதிப் பெரு மூச்சு விட்டான். தலையில் பெரிய சுமை இறங்கியது போல் இருந்தது. ஆனால், அஜ்மல் கட்டக் பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு கண்டியிலிருந்து திரும்பி கொழும் புக்கு வந்த செய்தியை 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் ஒரு மாலையில் தொலை -க்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட ஒரு செய்தி மிகவும் அதிர்ச்சியூட்டி பேரதிர்வை ஏற்படுத் தியது. தொலைக்காட்சிப் பெட்டியைத் திறந்தவுடன், அஜ்மல்கட்டகின் முகம் அதில் பளிச்சிட்டது, செய் தியைப் பின்தொடர்ந்தான் அப்துல்பேலா. பேராதனியா பல்கலைக் கழக தேர்வில் வெற்றி பெற்றவர்களின் பட்டியலில் முதலிடம் பிடித்த அஜ்மல்கட்டகின் மகள் கட்டக் அன்ஷா கூடுதல் ஆசிரியர்கள் அல்லது பயிற்சி வகுப்புகளின் ஆதரவி-ன்றி அந்த பெண் தொண்ணூற்றெட்டு சதவிகிதம் பெற்று இந்த மாபெரும் வெற்றியை அடைந்தார் என்பதை தொலைக்காட்சித் தொகுப்பாளர் தொடர்ந்து கூறினார். தந்தை யும் மகளும் ஒருவருக்கொருவர் இனிப்புகளை ஊட்டிக்கொண்டிருக்கும் படம் தொலைக்காட்சித் திரையில் பளிச்சிட்டது. கட்டக்அன்ஷாவின் தாயார் அவர்களைப் பெருமிதத்துடனும் மகிழ்ச்சியுடனும் கண்களால் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்துல் பேலா அந்த காட்சியில் நிற்க முடியாமல் தொலைக்காட்சியை அணைத்தான்.

"அந்த பொண்ணு எவ்வளவு திறமையோ அவ்வளவு அழகு" என்று அவன் பின் னால் நின்று செய்தியை பார்த்த அல்தாப்பாத்திமா சொன்னாள். அப்துல்பேலாவின் கன்னங்களில் பலமாக அறைந்ததைப் போன்று அந்த வார்த்தைகள் இருந்தன. அன்று முதல் அன்ஷாவின் முகம், ஒரு நிலையான அசையாப்படம் போல, கிட்டத் தட்ட எல்லா நேரங்களிலும் அவன் கண்களுக்கு முன்னால் தோன்றிக்கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அன்ஷா ஒரு சாதனைப்பெண் என்பதை நிரூபித்தாள். உயர்தர விஞ்ஞானப் பிரிவுத் தேர்வில் முதலிடம் பிடித்தாள், பின்னர் இறுதி எம்.பி.பி.எஸ். இப்போது ஆறு மாதங்களுக்கு லண்டனுக்குச் செல்கிறாள். அன்ஷாவின் லண்டன் பயணம் குறித்த செய்தி நேற்றைய நாளிதழில் வந்திருந்தது. செய்தி அச்சிடப்பட்ட பக்கத்தை அப்துல்பேலா கிழித் தெறிந்தான். பின்னர் அவன் அதை மடித்து தன் கைகளால் குப்பைத் தொட்டியில் வீச மனமின்றி அவனது நீளக்காற்சட்டைப் பைக்குள் வைத்தான். இப்போது, மின்கம்பந்க்கு அடியில் நின்று, பத்திரிகைத் துண்டை எடுத்து அன்ஷாவின் புகைப்படத்தைப் பார்த்தான். மங்கலான வெளிச்சத்தில் அன்ஷா புகைப் படத்திலிருந்து அவனைப் பார்த்து சிரித்தாள். அன்ஷாவின் வெற்றிச் செய்தி நாளிதழில் வெளியான அன்றே அவனது மகன் அப்துல்பேலாவின் தலையில் துடுப்பாட்ட மட்டையால் அடித்தது கசப்பான நகைச்சுவையாக இருந்தது. அந்த மங்கலான வெளிச்சத்தில், அன்ஷாவின் கண்களை அப்துல்பேலா கூர்ந்து பார்த்தான். மனிதர்களின் கண்களின் வடிவமும் அளவும் மாறாது என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஒரு மனிதன் வயதுக்கு ஏற்பமற்ற அனைத்து அம்சங்களும் உடல் உறுப்புகளும் மாறுகின்றன, ஆனால் கண்கள் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கும்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், அஜ்மல்கட்டகின் மனைவி, பெண் குழந்தையைத் தன் கைகளில் ஏந்தியபடி, முச்சக்கர வண்டியில் ஏறும் போது, அந்த மருத்துவமனையிலிருந்து, புதிதாகப் பிறந்த குழந்தையின் முகத்தில் அந்தக் கண்களை அவன் பார்த்தான். அப்துல்பேலா திரும்பிப் பார்க்க, அவன் கண்கள் குழந்தையின் முகத்திலும், அவளது அழகிய கண்களிலும் விழுந்தன. அப்துல்பேலா மின் கம்பத்தின் அடியில் தரையில் சரிந்து காட்டுக் கண்ணீர் வடித்தான். கடினமான, மூச்சுத் திணறல் அவனது உடலை உலுக்கியது. உண்மையின் அந்த இருண்ட தருணத்தில், அவனது செல்வம், சமூகப் பெறுமானம், அறிவு மற்றும் அதிகாரம் அனைத்தும் வெறுமையாகத் தோன்றியது. இனிமேல் தான் ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக இறக்க நேரிடும் என்பதை உணர்ந்தான். அந்த உணர்தல் அவனது ஆண் என்னும் அதிகார அரசியலுக்கு அதிர்ச்சியான அடியாக இருந்தது. மகனால் அடி படும் அவமானத்தை அவன் எப்படித் தாங்குவான்? அவனது மகன் மற்றும் அஹ்மத் ஹசன் டானியின் மகளின் திருமணம் நிறைவேறாமல் போனால் அவனது சமூக அதிகாரப் பிம்பம் வெற்றுக் குவளையாகிவிடும். அது மிகவும் கேவலமாக இருக்கும்! அன்ஷாவின் சாபம் தான் வாழும் காலம் வரை தனது உலகத்தை எதிர்வினையால் அழித்துவிடும் என்பதை அவன் அறிந்திருந்தான். ஓடும் தொடரூந்தின் முன்புறத்தில் குதிப்பது மிகச் சிறந்த மாற்றாக இருக்கும் என அவன் யோசித்தான். மற்றொரு தொடரூந்து கிடைத்தளத்தைக் கடந்தது. அப்துல்பேலா மெல்ல எழுந்து பிரதான


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாதையை நோக்கி நடந்தான் நேற்றைய கசப்பான நினைவு மீண்டும் வந்தது. அபுயஹ்யாவின் திருமணம் குறித்த இறுதி முடிவு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை முறைப்படி எடுக்கப்பட்டது. மறுநாள் திங்கட்கிழமை மகிழுந்துக் காட்சியறைக்கு ஒரு பெண் வந்தாள். காட்சியறையில் இருந்த மகிழுந்துகளைப் பார்ப்பதற்குப் பதிலாக, அந்தப் பெண் அப்துல் பேலாவின் அறைக்கு வந்தாள். காலை பத்து மணியாகியிருந்தது. ஒரு பெண் ஏன் தன் அலுவலக அறையில் தன்னை சந்திக்க விரும்புகிறாள் என்று அப்துல்பேலா யோசித்தான். ஒரு சிறந்த தள்ளுபடியை விரும்பும் வாடிக்கையாளராக இருக்கலாம் என அவன் எண்ணினான். அவளை சாதாரணமாகப் பார்த்துவிட்டு ஒரு நாற்காலியைக் காட்டினான். ஆனால் அந்த பெண் நாற்காலியில் அமரவில்லை. அவள் அவனருகில் வந்து அவன் கைகளைத் தொட்டாள். அப்துல்பேலா இப்போது தீவிரமாக ஆச்சரியப்பட்டான். எந்த வாடிக்கையாளரும், அவன் நினைவில் வைத்திருக்கும் வரை, அவனது கைகளைப் தொட்டதில்லை. ஒருவேளை அந்தப் பெண் தனது பழைய தோழர்களில் ஒருவரின் மகளாக இருக்கலாம், அவன் யூகிக்க முயன்றான்.

"என்னால் உங்களை அடையாளம் காண முடியவில்லை,அருள்கூர்ந்து உங்களை அறிமுகப்படுத்த முடியுமா?" பதிலளிப்பதற்குப் பதிலாக, அந்தப்பெண் அவனை நோக்கி ஒரு கேள்வியைக் கேட்டாள். "அஹ்மத்ஹசன் டானியின் மகளுடன் அபுயஹ்யாவின் திருமணத்தை நீங்கள் நிச்சயித்துவிட்டீர்களா?" இம்முறை அப்துல்பேலா உண்மையிலேயே வியந்தான். இந்தச் செய்தி மிகக் குறைவான குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களுக்கு மட்டுமே தெரியும். இந்த விடயம் இந்த பெண்ணுக்கு எப்படி தெரிய வந்தது? "ஆம்,அது உண்மை. ஆனால் அதைப் பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் அஹ்மத்ஹசன் டானி மகளின் தோழியா?" அந்தப் பெண் அறையைச் சுற்றி ஓர் உல்லாசப் பார்வையைப் பார்த்தாள். அறையில் மூன்றாவது நபர் இல்லை. கண்களைத் தாழ்த்தி பேச ஆரம்பித்தாள். அந்தத் தனிமையான அலுவலக அறையில் அந்தப் பெண் அவனிடம் சொன்னது அப்துல்பேலாவை உண்மையாகவே உலுக்கியது.

"நான் நிதாநஸ்ருள்ளா கான்" என்று அந்த பெண் கூறினாள். "கடந்த மூன்று வருடங்களாக நானும் அபுயஹ்யாவும் உறவில் இருக்கிறோம். திருமணம் செய்துகொள்ள முடிவு செய்திருந்தோம். நான் இப்போது இரண்டு மாதமாக கருவுற்று இருக்கிறேன். இதை உங்களிடம் சொல்வது மிகவும் சங்கடமாக இருக்கிறது. ஆனால் எனக்கு வேறு தேர்வு இல்லை. இந்த நாட்களில் அபுயஹ்யா என்னை மிகவும் தவிர்க்கிறான். நேற்று தான் அவனுடைய நண்பர்களிடம் இருந்து அவருக்கு வேறொரு பெண்ணுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தை நிச்சயித்துள்ளார்கள் என்று அறிய நேர்ந்தது. நீங்கள் எனக்கு நீதி வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையுடன் உங்களிடம் வந்துள்ளேன்" என்றாள். அப்-துல் பேலாவின் முகத் தில் இருந்து குருதி எல்லாம் ஓடியது... அவன் தலை சுற்ற ஆரம்பித்தது. அந்தப் பெண் சொன்னது நம்ப முடியாதது மட்டுமல்ல, அது முற்றிலும் அருவருப்பானது. மேசையில் இருந்த தண்ணீர்க் குவளையை எடுத்து சில விழுங் குகளில் காலி செய்தான். நிதாநஸ/ருள்ளா கான் தனது கைப்பையை திறந்து சில புகைப்படங்களை எடுத்தாள். அவற்றை அப்துல்பேலாவிடம் ஒப்படைத்தாள். அவை ஒவ்வொன்றிலும், அபுயஹாயாவும் நிதா நஸ/ருள்ளா கானும் சமரசமான நிலைக-ளில் ஒன்றாக இருந்தனர்.

"என் தந்தையைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் பிரதிக் காவல்துறை அதிகாரியான திரு நஸ்ருள்ளாகான். நான் அவரிடம் எதுவும் சொல்லவில்லை. ஆனால் என் தாய்க்கு விடயம் தெரியும். நீங்கள் நிச்சயமாக எனக்கு நியாயம் சொல்வீர் கள் என்று எனக்குத் தெரியும். மாமா" என்றாள். நிதாநஸ்ருள்ளாகான் அந்த அறையை விட்டு செல்வதற்காக எழுந்தாள். அப்துல்பேலா அவன் நாற்காலியில் இருந்து எழுந்து அவள் முன்புறம் நின்று "திருமணம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டு விட்டது. இந்த விடயம் வெளியில் போனால் எனக்கு என்ன அவமானம் வரும் என்பது உனக்குத் தெரியும். சமூகத்தில் என் மதிப்பினை அது கெடுத்துவிடும்!" உள்ளங்கை களை மடக்கிக் கெஞ்சினான். நிதாநஸ்ருள்ளாகானின் முகம் விறைத் தது. அவள் இனி உதவியற்ற, துன்பப்பட்ட பெண் போல் தோன்றவில்லை. "உங்கள் சொந்த மதிப்பு மற்றும் பதவியைப் பற்றி நீங்கள் மிகவும் கவலைப்படுகிறீர்கள். அது எனக்கு எவ்வளவு நாசமாக இருக்கும் என்று நீங்கள் இப்போதாவது யோசித்திர்களா? இரண்டு நாள் அவகாசம் தருகிறேன். இந்த இரண்டு நாட்களுக்குள் நீங்கள் நல்ல முடி வைச் சொல்ல வேண்டும். இந்த நெருக் கடியிலிருந்து எனக்கு உதவ நீங்கள் நடவ-டிக்கை எடுக்காவிட்டால் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு மற்றும் நீதிமன்றத்தின் உதவியை நாட வேண்டிய கட்டாயத்தில் உள்ளேன். ஊடகங்களை அணுகுவேன். அபுயஹ்யா போன்ற ஒரு துரோகிக்கு பாடம் கற்பிக்க எனது பெயரை கொச்சைப்படுத்-தவும் தயங்கமாட்டேன். நிதாநஸ்ருள்ளாகான் இறுதி எச்சரிக்கையை விடுத்து அறை யை விட்டு வெளியேறினாள்.

அப்துல்பேலா வியர்வையில் நனைந்தான். அறையில் பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டி தொடர்ந்து ஓசை எழுப்பியது. ஆனால் கோபமான வெப்பக்காற்றின் சூடு போல் வெப்பம் திணறியது. அவனது உயிர் தன்னிடமிருந்து வெளியேறிவிட்டதைப் போல அவன் நாற் காலியில் சாய்ந்தான். நீண்ட நேரம் அப்படியே அமர்ந்திருந்தான். பேச்சுவார்த்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தையை முன்னெடுப்பதற்கு முன் அப்துல்பேலா அபுயஹ்யா மற்றும் ரானாலியாக தின் கருத்தை எடுத்துக் கொண்டான். அவர்களிடமிருந்து செல்வதற்கான சமிக்ஞை கிடைத்த பின்னரே அவர் அஹ்மத்ஹசன் டானியிடம் இது குறித்து கலந்துரையாடினான். இந்த திருமணம் கைவிடப்பட்டால், அஹ்மத்ஹசன் டானியின் அரசியல் மற்றும் சமூக அந்தஸ்துக்கு அது பெரும் அடியாக இருக்கும். அவன் அதை ஒரு தோல்வியாக எடுத்துக்கொள்வான். அவமானத்திற்கு பழிவாங்க எந்த எல்லைக் கும் செல்வான். அவன் ஆளும் கட்சியின் சக்திவாய்ந்த அமைச்சராக இருக்கிறான். மேலும் அப்துல்பேலாவின் வணிகப் பேரரசை அவனால் தூசிக்கு கொண்டு வர முடியும். அதே சமயம் நிதாநஸ/ருள்ளாகா னின் மிரட்டல்களை அலட்சியப்படுத்தவும் முடியவில்லை. அவளால் அப்துல்பேலாவின் மதிப்பை சீர்செய்ய முடியாதபடி அழிக்க முடியும். அப்துல்பேலா திமிங்கிலத்திற்கும் ஆழ்கடலுக்கும் இடையில் சிக்கிக் கொண் டவனைப் போல் இறுகிப் போயிருந்தான்.

மறுநாள் காலை அவன் தனது மகனிடம் அந்தப் பெண்ணின் குற்றச்சாட்டில் உண்மை உள்ளதா என்று கேட்டான். ஆனால் அபுயஹ்யாவிடம் இருந்து இப்படி ஒரு காட்டுத் தனமான எதிர்வினையை அவன் எதிர்பார்க்கவே இல்லை. அவனது மகன் அவனை பொது இடத்தில் ஆடைகளை அவிழ்த்து விட்டதைப் போல் அன்று இரவு அபுயஹ்யா குடிபோதையில் வீடு திரும்பினான். பதினொன்றரை மணிக்கு அப்துல்பேலா அவனது அறைக்குச் சென்றபோது அவன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனை உறக்கத்திலிருந்து இழுத்து, கோபமடைந்த அப்துல்பேலா மிகுந்த கோபத் துடன் கத்தினான். போதையுடன் வந்த அபுயஹ்யா படுக்கைக்கு அடியில் இருந்த துடுப்பாட்ட மட்டையை இழுத்து அப்துல்பேலாவின் தலையில் கண்மூடித்தனமாக தாக்கினான். வலியால் அலறித் துடித்த அப்துல்பேலா, இரண்டு கைகளாலும் தலை யைக் பிடித்துக் கொண்டு தரையில் விழுந்தான். அவனது மனைவி குளிர்கட்டி (Icecube) எடுக்க சமையலறைக்கு விரைந்தாள். அபுயஹ்யா சம்பவ இடத்தில் இருந்து தப்பிக்க ஒரு நிமையம் எடுத்துக்கொண்டான். அந்த சம்பவம் ஓர் அதிரடிப்பதில் போல அவன் முன் தோன்றியது. அப்துல்பேலா கண்ணீரைத் துடைத்தான். "பாவம் ரானாலியாகத்." அவள் தன் உயிராக நினைத் தாள். அபுயஹ்யாவை அவள் செல்லமாகப் பார்த்தாள் அது அவள் தவறல்ல. அபுயஹ்யா தன் சொந்தக் குழந்தை இல்லை என்பது அவளுக்குத் தெரியாது. ஹீரா ஜைனபியைவிட அப்துல்பேலாதான் அவளது குற்றவாளி. உண்மை எப்போதாவது வெளிப்பட்டால் ஹீரா ஜைனபியை விட ரானாலியாகத் மிகவும் வேதனைப்படுவாள். விடயங்கள் அப்படியே இருக்கட்டும். நெருக்கடிக்கு சிறந்த தீர்வாக அப்துல்பேலா ஒரு முடிவை யோசித்தான். 'நான் ஏன் ஒரு மகன் மீது ஆசைப்பட்டேன்?" அப்துல்பேலா தன்னைத்தானே நொந்து கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டான். அபுயஹ்யா போன்ற கெட்டவன் தன் குடும்பத்தின் பெயரை எப்படிக் காப்பாற்றுவான்? இன்று ஒவ்வொரு நாளும் தனது பெற் றோரை கொஞ்சம் கொஞ்சமாக கொல்லும் ஒரு மகன் அவர்கள் சாவடைந்த பிறகு மதிப்பினை எப்படி வாழவைக்க முடியும்?" ஒவ்வொரு நாளும் அன்ஷாக்கள் பெரிய கனவுகளுடன் தங்கள் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கின்றார்கள். ஆனால் தந்தை கள், ஒரு மகன் மீதான குருட்டு அன்பினால் உந்தப்பட்டு, அபுயஹ்யா போன்ற அரக்கர்களிடம் அவர்கள் தப்பிக்க முடியாமல் மாட்டிக்கொள்கிறார்கள். கடைசியாக, அப்துல்பேலா தனக்கு விருப்பமான அவனது வணிக பேரரசின் மீது தனது பார் வையை செலுத்தினான். இரவு முடியும் தறுவாயில் இருந்தது. தாமதிப்பதில் பொரு ளில்லை. இரவின் ஆழ்மனதில் அவனுடைய இந்த சபிக்கப்பட்ட வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைப்பது நல்லது என்று அப்துல்பேலா இறுதியாக முடிவு செய்தான். தொடரூந்து செல்லும் மேடையின் கடைசிப் பகுதியை நோக்கி நடந்தான். அவனை இங்கு யாரும் பார்க்கவில்லை. தொடரூந்து ஆற்றின் பாலத்தைக் கடந்தவுடன் அவன் தண்டவாளத்திற்குச் சென்று தொடரூந்தில் தன் உயிரை முடித்துக் கொள்வான். அதன் பிறகு அவனது வேதனைகள் அனைத்தும் முடிவுக்கு வரும்.

தண்டவாளத்தில் ஒரு கடினமான ஒளி வீசியது. ஓர் இயந்திர த்தின் சமிக்ஞை சத்தம் கேட்டது. ஆம், ஒரு தொடரூந்து கிடைமேடையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. புதர்கள், மண் குவியல்கள் மற்றும் தூக்கி எறியப்பட்ட நெகிழித்(Plastic) தண்ணீர்க் குவளைகள் ஆகியவற்றில் தடுமாறிக்கொண்டே அப்துல்பேலா கிடைதளத்திற்கும் தொடரூந்துப் பாதைக்கும் இடையுள்ள நீளத்தை கடந்து சென்றான். திடீரென்று, அவனது இடதுகால் ஒரு மென்மையான துணி போன்ற ஒன்றை மிதித்தது. அடுத்த கணம், புதிதாகப் பிறந்த குழந்தையின் சிணுங்கல் அந்த மூட்டையிலிருந்து வெளியே வந்தது. அந்தச் சத்தம் அவனது நரம்புகளைத் துடிக்கச் செய்து அவனை திடீரென நிறுத்தியது. குனிந்து மூட்டையை எட்டிப் பார்த்தான். புதிதாகப் பிறந்த குழந்தை ஒன்று புடவையால் சுற்றப்பட்டுக் கிடந்தது. அந்தக்காட்சி அவனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. குழந்தையைத் தூக்கிக்கொண்டு தன்னை நோக்கி வேகமாக வந்த தொடரூந்தைப் பார்த்தான். இருநூறு அல்லது முந்நூறு மீட்டர் தூரம்தான் இருந்தது. குழந்தையை கீழே தூக்கி எறிந்துவிட்டு பாதைக்கு மேலே செல்ல வேண்டுமா அல்லது குழந்தையை கையில் வைத்துக்கொண்டு பாதை வரை நடக்க வேண்டுமா? இரண்டு விடயங்கள் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் நடந்தன. அப்துல்பேலா பலமாகத் தள்ளப்பட்டதைப் போல சில வேகமான அடிகள் பின்வாங்கினான், சரக்குத் தொடரூந்து காது பிளக்கும் சத்தத்துடன் நடைமேடையைக் கடந்தது. இப்போது அப்துல்பேலா மட்டும் இல்லை. அவன் கைகளில் ஒரு பெண் குழந்தை இருந்தது. அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கேயே விட்டுச் சென்றது யார். அவளது மோசமான தாயா அல்லது தன்னைப் போலவே குற்றவாளியான தந்தையா என்பது அவனுக்குத் தெரியாது. அவன் கைகளில் இருந்த குழந்தையால் குழப்பமடைந்து செய்வதறியாது முடிவு எடுக்காமல் அப்படியே நின்றான். ஒரு மாயை உலகத்துடனான அனைத்து உறவுகளையும் துண்டித்துவிட்டு, இவ்வளவு கடினமான சோதனையை எதிர்கொள்ள தனது வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவரவிருக்கும் அவனைப் போன்ற ஒருவரை கடவுள் ஏன் தேர்ந்தெடுத்தான் என்பது அவனுக்குப் புரியவில்லை. மீண்டும் குழந்தையைப் பார் த்தான். அது ஒரு நல்ல நிறமுள்ள, பெண் குழந்தை. புறப்படும் இரவின் இருளில், குழந்தையின் பெரிய கண்கள் கிட்டத்தட்ட அன்ஷா அப்பாவி கண்களைப் போலவே இருந்தன. அவனை நோக்கி ஒரு நதியின் திசையிலிருந்து குளிர்ந்த காற்று வீசியது இன்னும் அவனை அன்பின் அமைதிமொழி மிகவும் பனி போன்று நனைத்தது. உண்மையில் அந்தச் சிறுதருணத்தில், இத்தனை ஆண்டுகளாகத் தன்னைத் துன்புறுத்திய எல்லா சங்கடங்களுக்கும் குழந்தைதான் தீர்வு என்பதை அவனால் உணர முடிந்தது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு செய்த குற்றத்திற்குக் கைமாறு செய்ய வாழ்க்கை அவனுக்கு இன்னொரு வாய்ப்பைக் கொடுத்தது. அப்துல்பேலா குழந்தை மூட்டையை மார்பில் அணைத்துக் கொண்டு மேடையை நோக்கி ஓடினான். அவனுடைய பார்வை முழுக்க குழந்தையில் விழுந்தது. அவனது மனம் தொந்தரவு குறைந்தது போல் உணர்ந்தான். குழந்தை அழுததும் குழந்தைக்கு உணவளிக்க வேண்டியிருந்தது.

கிடைத்தளத்தில் இருந்த ஒரு தொலைபேசி நிலையத்தில் இருந்து அவன் வீட்டிற்கு அழைப்பினை செய்தான். மறுமுனையிலிருந்து ரானாலியாகதின் பீதியான குரல் வரியில் மிதந்தது. "எங்க போயிருந்தீர்கள்" என்று ரானாலியாகத் அழுது கொண்டே கேட்டாள். "இரவு முழுதும் உங்களுக்காக காத்துகிட்டு இருந்தேன். எல்லா இடத்துக்கும் அழைப்பு எடுத்தேன். நீங்கள் எங்கிருந்து பேசுகிறீர்கள்?" பதில் சொல்லும் போது அப்துல்பேலாவின் குரல் அமைதியாகவும் நிதானமாகவும் இருந்தது. "நான் சொல்வதை கேள். நம்மடசாரதி இவ்வளவு அதிகாலையில் வந்திருக்க மாட்டான் என்று எனக்குத் தெரியும். நீ மகிழுர்ந்தை ஓட்ட வேண்டும். கோட்டே தொடரூந்து நிலையத்தின் கிடைதள எண்.1 க்கு வா. நான் அங்கேயே காத்துகொண்டு இருப்பேன். விரைவாக. நான் உன்னிடம் சொல்ல நிறைய இருக்கிறது. நான் அவற்றையெல்லாம் தொலைபேசியில் சொல்ல முடியாது." அப்துல்பேலா தொலைபேசியினை மற்றைய கைக்கு மாற்றயபின் கைகளில் இருந்த பெண் குழந்தையைப் பார்த்தான். குழந்தை சிணுங்குவதை நிறுத்தியது. அப்துல்பேலா குழந்தையை மென்மையாய் நெஞ்சில் பிடித்துக் கொண்டான். "கொஞ்சம் இரு, என் அன்பே! உன் உம்மா வந்துகொண்டிருக்கிறாள்!" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புண்ணியம் ஓங்கி
புதுயுகம் காண
பூமியில் உள்ளோர்க்குப்
புத்தகம் பரிசளிப்போம்.

கலியுகம் உடைத்து
காவியம் படைப்போம்
நூலைக் கொடுத்து
நாளை வெல்வோம்


நடுவூர்ப் பழுத்த
நச்சு மரமகற்ற
நல்லேடு கண்டு
நானிலம் காப்போம்

புத்தகம் கொடுத்து
நல்லறம் காண்போம்
புத்துயிர் அளித்துப்
பூமியைக் காப்போம்

இலக்கியம் கண்டு
இன்பம் காண
பழைமை கொண்டு
புதுமை படைக்க

பள்ளியில் மாணவர்
பயின்றிட நல்ல
பனுவல் கொடுப்போம்
புல்லரை ஒழிப்போம்

பத்தியில் நாங்கள்
புத்தியாய் இருந்து
பாரினை வெல்வோம்
நல்நூலினை ஏற்போம்...




தமிழர் தன்மானம் காக்கக் களமிறங்கி
தன்னலம் பாராமல் தங்களை அர்ப்பணித்து
தலைவன் வழியினை தம்வழியாய் நினைத்து
தம்முயிரை துச்சமாய் எண்ணி ஆகுதியானவர்கள்

வீட்டை மறந்து காடே வீடென்றவர்
தரையில் வானில் கடலில் போராடியவர்
தம்கழுத்தில் நஞ்சேந்தி மண்ணைக் காத்தவர்
இன்றும் நம்முள்ளத்தில் வாழ்கின்ற உன்னதர்

தமிழுக்காய் தரணியிலே உரிமைப் போராடியவர்
எம்துயர் துடைக்க தம்குருதி சிந்தியவர்
நம்கொள்கை இதுவென்று உலகிற்கு உரைத்தவர்
ஒழுக்கத்தை மதித்து அழுக்கை துடைத்தவர்

எதிரியை அழிக்க தீயாய் எழுந்தவர்
சோதனை வந்தாலும் சாதிக்கத் துணிந்தவர்
மண்ணுக்குள் மடிந்தாலும் மறவாதவர் புகழ்
விண்ணுலகு ஏகினும் போற்றப்படுபவர் அவர்களே


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பணம் தின்னிகள்....

எஸ்.எம். அம்ஹர்

பதினெட்டு வயதில்
புதினங்கள் பார்க்கும்
புதுமைக் கன்னி ஆயிஷா!
விதியின் சறுக்கல் விளையாட்டில்
பெற்றவனை இழந்தவள்!

சிக்கித்தவிக்கும் வறுமைக்
கோட்டைக் கடக்க
முக்கிமுனங்கிக் கொண்டு
பக்கத்து வீடுகளில்
பணிவிடை செய்து
பருவமகளைப் பராமரிப்பவள்
ஆயிஷாவின் தாய்!

கல்யாண வயசிப் புதல்வியைக்
கரைசேர்க்க
வீடுகளில் கரிசினைகளோடு
கைகள் படும்
பாடுகளை இவள் மட்டுமே அறிவாள்;
இறைவனும் சாட்சி!

தேடிவரும் மாப்பிள்ளைகள்
ஓடிச்செல்வது இவளுக்கு ஒன்றும்
புதிதல்ல. காரணம்
ஏழைமகளிடம் சீதனம்
தேடுகிறார்கள் இக்
கோழைகள்!

மானிடப் பரம்பரைக்குள்
மனிதத்தைத் தேடாமல்
பணமுட்டைகளைத் தேடும்
சீதனச் சக்கரவர்த்திகள்தானே
இங்கு அதிகம்!
இல்லை இல்லை மனிதப் பணம்
தின்னிகள்தானே அதிகம்!

## நம்மட முற்றத்தில் படைப்பாளிகளின் படைப்புகள்

சிறுகதை, கவிதை, கட்டுரை, நகைச்சுவை, பயன்தரு தகவல்கள், ஓவியங்கள் (கறுப்பு/வெள்ளை) போன்ற படைப்புகளை படைப்பாளிகளிட மிருந்து எதிர்பார்க் கிறோம். படைப்புகள் அனைத்தும் பிறமொழி கலவாது இருத்தல் வேண்டும். பிறமொழி கலப்பின் அச்சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல்லினை இடுவதற்கு நம்மட முற்றத்தின் ஆசிரியர் குழுவிற்கு உரித்து உண்டு. ஆக்கங்கள் பாமினி (Bamini) அல்லது Unicode இல் இருத்தல் வேண்டும். எழுத்துப் பிரதிகள் நிராகரிக்கப்படும்.

nammadamuttam20@gmail.com எனும் மின்னஞ்சலுக்கோ அல்லது 0772908990 எனும் புலனத்திற்கோ (WhatsApp) அனுப்பி வைக்கவும்.

–முதன்மை ஆசிரியர்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இஸ்ரேலிய உளவுத்துறைத்தலைவரான யிட்சாக் ஹோபி அவர்கள் கென்யா நாட்டின் உளவுத்துறைத் தலைவரை உடனடியாகத் தொடர்புகொண்டு சங்கேத மொழியில் விபரத்தைச் சுருக்கமாக ஆனால் முழுவிபரங்களும் விளங்கக் கூடிய வகையில் தெளிவுபடுத்தினார். எதுவித மறுப்புமின்றி இஸ்ரேலின் கோரிக்கை கென் யாவினால் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. கென்யாவிற்குச் சென்று விரைந்து உளவு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய உளவுத்துறையின் ஆறு உறுப்பி னர்களைத் தயார் செய்யுமாறு டேவிட் கிம்சேயிடம் உளவுத்துறைத் தலைவர் பணித் த போது தயார் நிலையில் வைத்திருந்து பத்துப்பேரில் ஆறு பேரின் பெயர்களை அக்கணத்திலேயே தலை வரிடன் ஒப்படைத்தார் டேவிட் கிம்சே. அன்றைய நாளே தனியான ஒரு விமானத்தில் மொசாத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட திறமைசாலிகளான ஆறு உளவாளிகள், கென்யத் தலைநகரான நைரோபியில் போய் இறங்கினார்கள்.

விமானத்தில் தீவிரவாத அமைப்பினரால் பிடித்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதி களை விடுவிக்கும் அதிரடி நடவடிக்கை ஒன்றை நடத்த மொசாத் தனது திறமை சாலிக ளான 6 உளவாளிகளை அனுப்பி வைக்கிறது என்ற விபரம் கென்யாவின் உளவுத் துறைக்குத் தெரியப்படுத்தப்பட்டது. அவர்களுக்கு கென்யாவில் தேவை யானவற்றைச் செய்து கொடுக்குமாறு ஒரு கோரிக்கையும் இஸ்ரேலில் இருந்து கென்யாவுக்கு இராஜ தந்திர மட்டத்தில் போய்ச் சேர்ந்தது.

## உளவாளிகள் தங்கவைக்கப்பட்ட வீடு

ஆறு மொசாத் உளவாளிகளும் கென்யாவின் நைரோபி நகரை அடைந்தவுடன் அவர்களை பாதுகாப்பு வீடுகள் (Safe House) என உளவு வட்டாரங்களில் குறிப் பிடப்படும் வீடுகளில் ஒன்றில் தங்கவைத்தார்கள் கென்ய நாட்டு உளவுத்துறை அதி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காரிகள், பொதுவாகவே எல்லா நாட்டு உளவுத்துறைகளும் இப்படியான பாதுகாப்பு வீடுகளை வைத்து இயக்குவது வழக்கம். வெளிப்படையாக மக்கள் குடியிருப்புகள் போலவே இவ்வீடுகள் தோற்றமளிக்கும். இந்த வீடுகள் உளவுத்துறையினரின் தனியான பாவனைகளுக்கானவை. மொசாத்தின் 'உளவுத் திறனாளி' (Spy Master ஸ்பை மாஸ்டர்) என்று அழைக்கப்பட்ட டேவிட் கிம்சே, மொசாத் தின் சாதனை படைத்த பல நடவடிக்கைகளைத் திட்டமிட்டவர் இவர்தான்! நைரோபியில் இப்படியான சுமார் 20 வீடுகளை கென்யாவின் உளவுத்துறை வைத்திருந்தது. மக்கள் குடியிருப்புக்களில் கலந்திருந்த இந்த வீடுகள் தகவல் தொடர்புக்கான பாதுகாப்பான தொலைபேசி இணைப்புக்ளைக் கொண்ட வீடுகள். ஆனால், அந்த தொலைபேசி இணைப்புக்கள் கென்யாவின் தொலைத் தொடர்பு இலாகாவினால் நிர்வகிக்கப்படும் இணைப்புக்கள்.

சுருக்கமாகச் சொன்னால், அங்கிருந்து மேற்கொள்ளப்படும் எந்தத் தொலைத் தொடர்பும் கென்ய உளவுத்துறை அறியாமல் வெளியே செல்ல முடியாது! முதலில் அனுப்பப்பட்ட ஆறு மொசாத் உளவாளிகளில் இரண்டுபேர் உளவாளிகள் மாத்திரமல்ல, அவர்கள் தொழில்நுட்பவியாலாளர்களாகவும் (Technicians) இருந்தார்கள். அவர்கள் இதுபோன்ற இரகசிய நடவடிக்கைகள் வெளிநாடுகளில் மொசாத்தால் நடத்தப்படும்போது வெளிநாடு ஒன்றில் பாதுகாப்பான தொலைத்தொடர்பு அலைவரிலை (Communication Chanel) ஒன்றை அமைப்பதில் நிபுணத்துவம் பெற்றவர்கள். அவர்கள் மூலமாக, நைரோபியில் இருந்த வீட்டுக்கும், இஸ்ரேலின் டெல்அவிவ் நகரத்துக்கும் நேரடியாக செயற்கைக்கோள் (Satellite) மூலமான தொலைத் தொடர்பு இணைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த இணைப்பு கென்யாவின் தொலைத்தொடர்பு இலாகாவுக்கு ஊடாகச் செல்லாத இணைப்பு என்பதலால், இவர்களது உரையாடல்களை கென்யாவில் யாருமே கேட்க முடியாது என்ற நிலை ஏற்பட்டது. அதன்பின் இந்தப் பாதுகாப்பான வீட்டிலிருந்த உளவாளிகளுக்கு உத்தரவுகள் மொசாத்தின் தலைமையகத்தில் இருந்து வரத்தொடங்கின. அதிரடி நடவடிக்கைக்காக இப்படி உகண்டாவுக்கு வெளியே கென்யாவில் முன்னேற்பாடுகள் ஒருபுறமாக நடைபெற்றுக் கொண்டிருக்க, மறுபுறத்தில் உகண்டாவில் என்ன நடந்துக் கொண்டிருந்தது?

## என்டபே விமான நிலையத்தில்....

ஏர் பிரான்ஸ் விமானத்தில் பயணம் செய்து கடத்தப்பட்ட இஸ்ரேலியப் பயணிகள், கடத்தல்காரர்களால் உகண்டாவின் என்டபே விமான நிலையத்தில் கடும் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு இருபத்து நான்கு மணிநேரமும் காவல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. அதிரடித் தாக்குதல் நடத்தப்படத் திட்டமிடப்படும் இந்த என்டபே விமான நிலையம் உகண்டாவின் தலைநகரில் இருந்தாலும், அளவில் சிறியது. அதனூடாக நடைபெறும் விமானப் போக்குவரத்தும் மிக மிகக் குறைவு. எனவே பயணிகள் நடமாட்டம் அந்த விமான நிலையக் கட்டடத்தில் பெரிதாக இருப்பதில்லை. இதனால் விமான நிலையத்தின் ஒரு பகுதியை முழுமையாகவே கடத்தல்காரர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்து, பணயக்கைதிகளை அங்கே வைத்திருந்தார்கள்.

உகண்டா நாட்டின் அன்றைய தலைவர் இடிஅமீன் அவர்கள் அரசியல் ரீதியாக இஸ்ரேலுக்கு எதிரான நிலை எடுத்திருந்த காலப்பகுதி அது. இதனால், கடத்தல்காரர்களுக்கு என்டபே விமான நிலையத்தில் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்பு ஒன்று மற்றொரு நாட்டு விமானத்தைப் பயணிகளுடன் கடத்திக் கொண்டு வந்து மூன்றாவது நாடு ஒன்றில் வைத்திருக்கின்றது. இப்படியான நிலையில் விமானம் இறக்கப்பட்டிருக்கும் மூன்றாவது நாடு வழமையாகக் கடத்தல்காரர்கள் மீது ஒரு கண் வைத்திருக்கும். அவர்கள் மீது தாக்குதல் நடத்த முடியுமா? பணயக்கைதிகளைக் காப்பாற்ற முடியுமா? என்றெல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கும்.


ஆனால் உகண்டாவில் இது தலைகீழாக இருந்தது. கடத்தல்காரர்களும், உகண்டாவின் பாதுகாப்புப் படை அதிகாரிகளும் ஒருவருக்கொருவர் நெருக்கமாக நடந்து கொண்டார்கள். அதற்கு ஒருபடி மேலேபோய், கடத்தல்காரர்கள் ஓய்வு எடுக்கும்போது உகண்டாவின் பாதுகாப்புப்படை அதிகாரிகளால் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்ட சாதாரண உள்நாட்டுக் காவலாளிகளே பணயக் கைதிகளை காவல்காத்தார்கள். உகண்டா அரசே கிட்டத்தட்ட கடத்தல்காரர்களின் பக்கத்தில் இருந்து செயற்படுவது போன்ற தோற்றம் ஏற்பட்டிருந்தது. அங்கிருந்த யாருக்கும், பிடித்து வைக்கப்பட்டிருந்த இஸ்ரேலியப் பணயக்கைதிகள் உட்பட, இவர்களை விடுவிக்க மொசாத் அதிரடி நடவடிக்கை ஒன்றைத் திட்டமிடுகின்றது என்ற தகவலே தெரியாது.

தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்க முற்றம்



**'தாமரைத் தீவான்'**

'நம்மட முற்றம்' ஆமாம் .
நம்முடை முற்றம் என்றும்
எம்முடை முன்றில் முன்னால்
எழில் அமைந்திருப்பதாகும்

அதையே போல் அமைந்த ஏடு
அழுகுக் கட்டுரைகள் பாக்கள் !
எதைச் சொல்லி எதை விடலாம்?
எல்லாமே நன்றே நன்றே!

திருமலைக் கிந்த ஏடு
தேவை தான், தொடரவேண்டும் !
அருந்தமிழ்ச் சொற்கள் பரவும்
அனைவரும் கற்றல் வேண்டும்.!

வாழ்த்திய படியே உள்ளேன்,
வருகவே புதுமை கொண்டு!
ஆழ்த்துக கற்போர் தம்மை அறிவினில்
வெல்க முற்றம் !

**"எண் பொருளவாகச் செலச் சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்பது அறிவு (424 குறள்)**

நூலகத்துக்கு
வாசிக்கப் போனேன்
சுவாசிக்க முடியவில்லை
தூசு...!

ஐந்தப்பனும் வேண்டாம்
ஆறப்பனும் வேண்டாம்
உனது
அப்பன் அம்மைக்கு நீ
ஆன பிள்ளையாய்
இருந்தால் எல்லாம்
ஆகும் அப்பனே...!

சொல்வதெல்லாம்
உண்மை
உண்மையைத்தவிர
வேறெதுவும் இல்லை
அந்த
காசுக்கு விலைபோன
சாட்சியின் கைபட்டு
உயிர் துறந்தது
இறைதூதரின்
புனித நூல்...!

விடுதலைச் சிலையின்
தூசுதட்டி அழகுபடுத்த
இருபது கோடிகள்
இருநூறு வருடங்களைக்
கடந்த
தோட்டக் குடியிப்புகள்
குப்பிவிளக்குமின்றி
இருளில்...!


பச்சோந்தியை
விருப்பான சின்னமாக
தேர்வு செய்து அவன்
தேர்தலில் குதித்தான்.
"ஏனடா தம்பி இத்தனை
சின்னங்களிருக்க இதில்?"
எனக்கேட்டபோது
"வெல்லும்வரை ஒரு கட்சி
வென்றபின் வேறொன்றில்
கூட்டு
என்பதே எனது இலட்சியம்"
அதுதான் என்றான்
பெருமையுடன்...!

## குறும்பு கவிதை..

-செம்மாதுளன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மல்லிகை வாசம்..

-தேவகி வாசன்-
நோர்வேய்

கூரிருள் கலைந்த அதிகாலை, கந்தன் வீட்டுச் சேவல் கூரை மேலிருந்து சிறகடித்துக் கூவியது. ஆனாலும் கந்தன் விடிந்ததும் தெரி யாமல் தூக்கத்தில் ஆழ்ந்து கொண்டிருந்தான்.

எப்போதும் அவன் தான் வளர்க்கும் அந்தச் செக்கச் சிவந்த பெரிய அழகிய சேவலின் கம்பீ ரக் கூவல் சத்தம் கேட்டதும் எழுந்து தோட்டத் துக்குப் போவதையே வழமையாக்கிக் கொண்ட வன். அன்றும் அதுபோல தூக்கம் கலைந்து விழித்துக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்து ஓலைப் பாயைச் சுருட்டி ஓரமாக வைத்து விட்டு முகம் கழுவ முற்றத்தில் இருக்கும் ஆழக் கிண ற்றடிக்குச் சென்று துலாவைப் பிடித்து தண்ணீர் அள்ளி அந்த சிறிய தொட்டியை நிரப்பிக் கொண் டிருக்க, இளம் தென்றலோடு ஏதோ வாசனையும் அவன் நாசியைத் துளைத்துச் செல்ல அந்த வாசனையை நுகர்ந்தபடியே தண்ணீரை அள்ளி வாளியில் ஊற்றியபடி முற்றத்தில் நிற் கும் மல்லிகைக் கொடியை அண்ணாந்து பார்த் தவனுக்கு அதிகாலைப் பனித்துளி குளிர் போல் அவன் மனமும் குளிர நீண்ட பெருமூச்சும் வர "ம்..எங்கட முற்றத்து மல்லிகையோ! என்றும் இல்லாதவாறு விரியாத மொட்டுக்களும், மொட்ட விழ்ந்து விரிந்து பூத்துக் குலுங்கும் அழகிய காட்சியாய் கடல் போல் பரந்து நிறைந்து இருக்கிறதே" என்று நினைத்துக் கொண்டு அதை ரசித்தபடியே "ஆகா! என்ன ஓர் அழகு .. ம்.....அழகு மட்டுமா? ம்..வாசனையும் ஒரு தனி வாசனைதான். இதை என்ர செல்லம் பார் த்தாள் என்றால் மரத்தோடையே கொய்து தலை யில் மாலையாக்கி விடுவாள் என்று தனக் குள் நினைத்தபடியே அதன் நறுமணத்தையும் நுகர்ந்தபடி கை, கால், முகம் கழுவிவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகைக் கொடியையும் சுற்றிப் பார்த்தபடி "இளவேனிற் காலத்தில் எங்கும் மலர்கள் மலர்ந்து நிறைந்திருப்பது ஓர் அழகுதான் எங்கட வீட்டு முற்றத்து மல்லி-கையும் இப்பதான் முதல் முதலாகப் இப்படிப் பூத்துக் குலுங்கி முற்றத்துக்கு கூடுதல் அழகைச் சேர்த்துக் கொண்டே வீட்டைச் சூழவும் நல்ல வாசனையைப் பரப்பி வீசிக் கொண்டிருக்கிறதால எங்கட முற்றத்தை விட்டுப்போக முடியாதவனாக மல்லிகைக் கொடியையே சுற்றிச் சுற்றி நிக்கிறனே!" என்றவாறு எண்ணியவன் மலர்ந்த மல்லி-கையில் தேன் நுகர வண்டுகள் மொய்த்திருந்து முரல்வது அவனது செவிகளுக்கு கேட்கவே, இயற்கையின் படைப்புக்களையும் எண்ணி மிதந்தபடி வீட்டின் உள்ளே சென்று தோட்டத்துக்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தான்.

அவனது அன்பு மனையாள் காமாச்சியும் சுடச்சுடச் தோசையும், அம்மியில் அரைத் தெடுத்த செத்தல் மிளகாய்ச் சம்பலும், ஆவி பறக்கிற தேனீரோடும் வந்து அவனுக்கு முன்னே நின்றவள், 'இந்தாங்கப்பா சாப்பிட்டு நேரத்தோட போங்கோ. வெய்யில் கொழுந்து விட்டு எறிக்க முதல் தோட்டத்துக்கு தண்ணீரைப் பாச்சுங்கோ' என்று சொல்லியபடியே வீட்டின் முற்றத்துக்குப் போனவள் மல்லிகையின் வாசனையில் மயங்கிவிட்டாள்.

மல்லிகை மரத்தின் கீழ் சென்று பதிவாக இருந்த கொடியில் மலர்ந்த மலரை நுகர்ந்து அதனைக் கொய்து கையில் வைத்திருந்தபடி தன் வலக்கையால் அதன் தண்டினைப் பிடித்துச் சுழற்றிய வண்ணம் விரிந்த மல்லிகையின் நடுவில் இருக்கும் மகரந்தத்தின் அழகையும் கூடவே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்க, அந்த நொடி கந்த னும் தோட்டத்துக்குப் போவதற்காய் மண்வெட்டியும் கையில் கடகமும் ஏந்தியபடி அவள் அருகில் வந்து நின்றவன் அவளது கையில் மல்லிகை மலர் இருப்பதைக் கண்டதும் "ம்.. என்ற சத்தமும் அவனை அறியாமலே வர இன்னும் அவள் அருகில் நெருங்கியவனாக காமாச்சி! இந்த மல்லிகை மலர்க் கொடியில் இருந்த போது பார்த்த அழகையும் வீசிய வாசனையையும் விட, என் கொடி இடை நடையழகாளின் உள்ளங்கையில இருக்கப்பாக்கிற போது! ஆகா! ஆகா! இரட்டிப்பாக அழகும் வாசனையும் கூடியிருக்கிறது என்று சிரித்தபடி காதலோடு சொல்லி விட்டு அவளின் உள்ளங்கை மல்லிகையை எடுத்து காமாச்சியின் தலையில் வைத்து விட்டு அவளின் கன்னத்தில் அன்போடு தட்டிவிட்டு, "சரி காமாச்சி நான் போட்டு வாறேன். நீ பிறகு வாவன்" என்று சொல்லியபடியே நடக்கத் தொடங்கினான் கந்தன்.

தெருவோரம் நடந்து கொண்டிருந்த கந்தனுக்கு காலை நேரமானதால் காகங்களின் கரைதலும், சிட்டுக்குருவிகளின் கூச்சலும் செவிகளுக்கு இனிய இராகம் கொடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதனை ரசித்தபடியே நடந்து தோட்டத்தை அடைந்தான் கந்தன். நீர் இறைப்ப-தற்காக கிணற்றடிக்குச் சென்று துலா மிதித்து நீர் இறைத்துக் கொண்டதால். நீண்ட நேரத்தின் பின் கந்தன் களைத்து போய் உடலை நனைத்த வியர்வையும் சிந்திக் கொண்டே இருக்க தொடர்ந்தும் துலா மிதித்து தண்ணீர் பாய்சிக் கொண்டிருந்-தவனுக்கு அசைந்தாடிய இளந்தென்றலோடு எங்கோ இருந்து வந்தது மல்லிகை வாசம். அதனை உணர்ந்தவன் நிமிர்ந்து பார்த்த வேளை தோட்டத்து வரம்பிலே மெல்லிய இடை வளைய ஆடி ஆடி வருகிறாள் அவனது அன்புக் காதல் மனைவி காமாச்சி. அவள் நீண்ட கருங் கூந்தலில் முற்றத்தில் மலர்ந்த மல்லிகை மலர் மாலை யாக அசைந்தாடிக் கொண்டிருக்க மெல்லென வீசிய தென்றலினால் வாசனையும் கந்தனது மூக்கைத் துளைக்க அவனும் காதலியைக் கண்டதுபோல் காதல் மனைவி யைக் கண்ட களிப்பில் முகம்மலர மிதித்த துலாவையும் இடையில் நிறுத்திவிட்டு அவளருகில் வருகிறான். அவளும் தலையிலே துணியால் சுற்றிய திருகணி வைத்து அவனுக்காய் சமைத்த மீன் குழம்பும். வாழைக்காய் போட்டுச் சமைத்த கத்தரிக்காய்ப் பால்க்கறியும். பச்சைமிளகாய் நிறையப் போட்டு ஆக்கிய உறைப்பான நெத்தலித் தீயலுமாய் சுமந்து கொண்டு வருவதை இமை அசைக்காது பார்த்தபடியே அவளை நெருங்கினான்.

வெயிலும் கொழுத்தி எறிய இருவருமாக தோட்டத்தில் ஓரமாக நிற்கும் கிளைகள் நிறைந்து பூத்துக் குலுங்கும் பெரிய பூவரசு மரத்தடியின் கீழ் அமர்ந்தனர். காமாச்சி அவனுக்காய் எடுத்து வந்த சுவையான உணவைப் பரிமாறிக் கொண்டிருக்க கந்த னும் அவள் கூந்தலில் அசைந்தாடிக் கொண்டிருக்கும் முற்றத்து மல்லிகையின் அழகினையும் தன் காதல் மனைவியின் அழகினையும் ஒன்று சேர இரசித்தபடி அவளைப் பார்த்து "காமாச்சி! இந்த அழகிய மல்லிகை மலர் கொடியில் இருந்-ததை விட உன் கொடியிடையே நீண்டிருக்கும் கூந்தலில் மாலையாய் இருப்பது ஒரு தனி அழகோ அழகோ ! அது மட்டுமல்ல வாசனையும் இரட்டிப்பு" என்றவன் காமாச்சி மணம் வீசும் என் வீட்டு முற்றத்து மல்லிகைக்கு என் வீட்டுக்குள் மணம் வீசிக் கொண்டிருக்கும் உன் வாசமான கூந்தல்தான் பொருத்தமடி என்று சொல்லியபடி காத லால் திழைத்தவன் காதல் மனைவிக்கு காதலோடு சொல்லிபடி முற்றத்து மல்லிகை மீதும் இருவரும் காதல் கொண்டு மகிழ்ந்தனர்.

♦♦♦


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலனமற்றுக்கிடக்கிறது
காலி செய்துவிட்டுப்போன வாடகை வீடு.
வரும்போது இருந்த ஒற்றை மின்குமிழ்
இனி இருட்டை உமிழத்தொடங்கும்
பக்கத்துவீட்டு மாமிக்கு
அம்மாவின் இருமல் குமட்டலைத்தராது.
அடுத்த வீட்டு பெரியவரின் தூக்கத்தை
குழந்தையின் சிரிப்பு தின்று தீர்த்து விடாது.
சன்னமாய் அறைந்த ஆணியில்
தொங்கிய அப்பாவின் புகைப்படமும்
பிடிங்கியாகி விட்டது
குழந்தை கிறுக்கிய
உயிர் ஓவியங்களை எல்லாம்
சுவற்று மயானத்தில்
சுண்ணாம்பு அடித்து புதைத்தும் முடிந்தது.
ஒப்பந்தத்தில் உள்ளபடியே
எல்லா நினைவுகளையும் அழித்தாகி
விட்டது.
குருவிக்கு நீர் வைத்த பாத்திரமும்
காக்கைக்கு சோறு வைத்த தட்டையும் தவிர.
யாரேனும் புதிதாய் வரும் வரைக்கும்
வெளிப்புறச் சுவர்கள் கேக்காதிருக்கும்
இதுபோன்ற வசைகளை
"இவங்களுக்கெல்லாம் எதுக்குத்தான் வீட்ட
கொடுக்குறாங்களோ தெரியல்ல" ..



# வாடகை வீடு

சத்தியப்பிரபா

# முயன்று முன்னேறு !

-ஏ.ஸீ.எம். முஸ்இல்-

முயன்றா லெதுவும் முடியாத தில்லை
முன்னோர் சொன்ன வாக்கிது.

என்னாலிது முடியு மென்று
எண்ணத்தில் வைத்து காரியம் பார்

முயற்சி திருவினை யாக்கும் –
முடிவி லிதனைக் கண்டு கொள்வாய்.

விடா முயற்சியே வெற்றிக்கு வழி
வாகை சூடியோர் வாழ்வில் கண்டோம்

அடி மேலடித்தால் அம்மியும் நகரும்
அழகா யிதனை மனதி லேற்று


அன்புட னென்றும் காரிய மாற்று
அனைவரும் போற்றும் வெற்றி காண்பாய்

முயற்சி யுடையா ரிகழ்ச்சி யடையார்
முத்தான வாக்கி னுண்மை காண்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கவியல் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் !



இயக்கவியல் வரலாற்றுப் பொருள் முதல் வாதம் என்பது மார்க்சியத்தின் தத்துவ-மாகும். மார்க்சியம் என்பது மூன்று அடிப்படைகளைக் கொண்டது. அதாவது தத்-துவம், பொருளாதாரம், அரசியல் என்பதுதான் அது. மேலும், விளக்கமாக மார்க்சிய சொல்லாடல்களுடன் புரிந்து கொள்ள வேண்டுமென்றால்,

1. *இயக்கவியல் வரலாற்றுப் பொருள் முதல் வாதம்* - இதைப் பொருள் முதல் வாதம் என்று சுருக்கமாகவும் அழைக்கலாம். இதுதான் மார்க்சிய தத்துவ இயலின் அடிப் படை.
2. *மார்க்சியப் பொருளாதாரம்* - இது தொடக்கத்தில் அரசியல் பொருளாதாரம் என்று அழைக்கப்பட்டது. உபரி மதிப்புக் கோட்பாடுகள்தான் இதன் அடிப்படை.
3. விஞ்ஞான சோசலிசம் அல்லது கம்யூனிசம் - இதுதான் மார்க்சிய அரசியலின் அடிப் படையாகும். அதாவது பொதுவுடை மைப் புரட்சியின் அரசியல் கோட்பாடு.

இம்மூன்று மார்க்சியக் கோட்பாடும் திடுமென வந்தவையல்ல. இம்மூன்று கோட் பாட்டு முடிவுகளுக்கும் வரலாற்றுத் தொடர்பும் தொடர்ச்சியும் உண்டு. இதை அவரே வெளிப்படையாக அறிவித்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மார்க்சியத் தத்துவம் அதாவது பொருள் முதல்வாதம் ஜெர்மானியத் தத்துவ இயலி லிருந்து செழுமையடைந்து வந்தவை. அதேபோல் பிரித்தானிய அரசியல் பொருளா-தாரத்தின் தோற்றுவாயிலிருந்து மார்க்சியப் பொருளாதாரமும், பிரெஞ்சு கற்பனா சோசலிசத்திலிருந்து மார்க்சிய விஞ்ஞான சோசலிசம் உருக்கொண்டது. இதுதான் "மார்க்சியத்தின் மூன்று உள்ளடக்கக் கூறுகளும் மூன்று தோற்றுவாய்களும்' என்பது. இதில் நாம் முதலில் பார்க்க இருப்பது இயக்கவியல் வரலாற்றுப் பொருள் முதல் வாதம். அதாவது மார்க்சியத் தத்துவவியல்.

## ♠ முதலில் தத்துவம் என்றால் என்ன?

(தத்துவம் என்பது தமிழில் மெய்யியல் என்றும் தத்துவஞானம் என்பதை மெய்யியல் அறிவு என்றும் புரிந்து கொள்வோம்)

தத்துவம் என்பது உலகைப் பற்றிய கருத்தோட்டங்களின் தொகுப்பு. அதாவது உலகைப் பற்றிய அனைத்தும் தழுவிய உலகக் கண்ணோட்டமே தத்துவமா-கும். இன்னும் விளக்கமாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் தத்துவஞானம் உலகம் முழுவதையும் பற்றி ஒரு கருத்தோட்டத்தை உருவாக்குகிறது. அதற்கேற்ப ஒரு அமைப்பு முறையை வளர்க்கிறது. மேலும் உலகிற்குள் நிகழும் நிகழ்வுப் போக் குகளைப் பற்றி ஒரு பொதுவான விளக்கத்தைத் தருகிறது. இறுதியில் அது மக்களின் உலகக் கண்ணோட்டமாக இருக்கிறது. இதுவே தத்துவமாகும்.

(உலகம் என்று சொல்வது இப்பிரபஞ்சம் முழுவதும். தமிழில் சொல்வதென்றால் அண்டம் அல்லது பால்வெளி)

மேற்குறிப்பிட்ட உலகைப் பற்றிய தத்துவஞானம் இரு வகையாகப் பிரிந்துள்ளது. அதில்,

1. பொருள் முதல்வாதம்
2. கருத்து முதல் வாதம்.

இவ்விரண்டு தத்துவங்களும் வேறுபடுகின்ற இடம் பொருளுக்கும் உணர்வு நிலைக்கும், இயற்கைக்கும் ஆன்மாவுக்கும் உள்ள உறவு நிலைகளைப் பற்றிய படிப்பாய்வின் வேறுபட்ட முடிவுகளே இவ்விரு வேறுபாட்டிற்கு அடிப்படையாகும். அதாவது உலகின் தோற்றம் குறித்தான ஆய்வின் முடிவுகளின் வேறுபாடே இவ்வகைக் கண்ணோட்டங்கள். இந்த இயற்கையில் மனிதன் மனி-தனாக வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்தபோது அவன் எழுப்பிய முதல் கேள்வி இந்த உலகம் எப்படித் தோன்றியது? அடுத்தது இந்த உலகில் எது முதலில் தோன்றியது?



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்பதுதான். இயற்கையின் வியப்புமிக்க நிகழ்வுப் போக்குகள் மனிதனைச் சிந்திக்கவும் வைத்தது. அதைவிட அதிகமாக அச்சமூட்டியது. இவ்வச்சம் விரைவாக இவனை ஒரு முடிவை நோக்கித் தள்ளியது. இதன் விளைவு தனக்கு மீறிய ஏதோ ஒன்று இருக்கிறது. அதுதான் இவ்வுலகை இயக்குகிறது என்ற முடிவுக்கு வந்தான். சரி அது எது என்ற கேள்விக்கு? அது கண்ணுக்குத் தெரியாது. ஆனால் எல்லா இடத்திலும் இருக்கிறது. அது ஏதோ ஒன்று நம்மை மீறிய சக்தி. இதுதான் மனிதனின் தொடக்க நிலை முடிவு.

இறுதியில் அந்த ஏதோ ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதுதான் கடவுள். இப்போது உலகைப் படைத்தவர் கண்டுபிடிக்கப்பட்டார். உலகைப் படைத்த கடவுள் அவரின் சிந்தனைச் சக்தியின் வெளிப்பாடாக மனிதனையும் மற்ற உயிரினங்களையும் படைத்து விட்டார். ஆக உலகம் கடவுளால் படைக்கப்பட்டதென்றும், சிந்தனையின் வெளிப் பாட்டில்தான், மற்ற பொருட்கள் அனைத்தும் (உயிருள்ளது, உயிரற்றது) தோன் றின என்பதுதான் கருத்து முதல் வாதத்தின் மையத் தத்துவம். அதாவது கருத்தே முதலானது மற்றவையெல்லாம் அதற்கடுத்ததுதான். இதனடிப்படையில் புதிய புதிய கடவுள்களும், மதங்களும் மதக் கோட்பாடுகளும் உருவாயின.

அடுத்து இந்த உலகம் யாராலும் படைக்கப்பட்டதில்லை. இது இயற்கை பொருட்களாலானது. இது எப்போது இருந்து கொண்டுதான் இருக்கிறது. இருக்கும். இதற்கு முதலுமி ல்லை. முடிவுமில்லை. இயற்கைப் பருப்பொருட்களின் இயக்க நிகழ்ச்சிப் போக்கின் விளைவே மனிதனும், மற்ற உயிரினங்களும் தோன்றக் காரணம். எனவே பொருளே அனைத்து மூலத்திற்கும் அடிப்படை என்பதுதான் பொருள் முதல் வாதத்தின் அடிப்படைத் தத்துவமாகும். இது கடவுள், மதம், ஆன்மா, மறுபிறப்பு, சொர்க்கம் இப்படி எந்த மாயக் கோட்பாடுகளையும் ஏற்பதில்லை. ஐம்புலன்களால் அறியப்படாதது எதையும் ஏற்பதில்லை. அறிவியல் வழிப்பட்ட ஆய்வு முடிவுகளை மட்டுமே ஏற்கிறது.

இவ்விரு வாதங்களையும் கடந்து மூன்றாவதாக "இருமை" வாதத்தத்துவங்களும் இருக்கின்றன. இருமைக் கோட்பாட்டாளர்கள் முன்வைப்பது கருத்தும், பொருளும் இரண்டும் ஒன்றோடொன்று நெருக்கமாகத் தொடர்புடையது. எனவே இரண்டும் முதன்மையானதுதான் என்பதுதான் இதன் கோட்பாட்டு அடிப்படையாகும். இருந்த போதிலும் இருமைக் கோட்பாடு தனித்துவமான செல்வாக்குப் பெறவில்லை. மேலும் சாரம்சத்தில் இது கருத்து முதல்வாதக் கோட்பாட்டின் அடிப்படையைக் கொண்டிருப்ப தால், இது கருத்து முதல்வாத வகையைச் சேர்ந்ததாகவே கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து முதல் வாதத்தை மறுத்து வந்த தத்துவம்தான் இயக்கவியல் வரலாற்றுப் பொருள் முதல்வாதம். மார்க்சு பொருள் முதல் வாதத் தத்துவத்தை ஒடுக்கப்பட்ட மக்களின் பாட்டாளி வர்க்கத்தின் தத்துவஞானமாக வரையறுத்து உலக அரங்கில் அதை நிறுவுவதற்கு முன்பாக பொருள் முதல்வாதக் கோட்பாடு உருவாகியிருந்தன. ஆனால் அது முழுமை பெற்ற ஒரு வடிவம் பெறவில்லை. இருந்த போதிலும் வரலா -ற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருள் முதல்வாதச் சிந்தனையாளர்கள் உலகம் முழுவதுமே இருந்துள்ளனர். அந்த வகையில் குறிப்பிடத்தக்க ஒருசிலரை நாம் தெரிந்து கொள்வோம்.

கி.மு.530 470 களில் பொருள் முதல் வாத உலகக் கண்ணோட்டத்தின் வளர்ச் சிக்கு எபிஸஸ்ஸைட் சேந்த "ஹெராக்ளிட்டஸ்" என்னும் கிரேக்கத் தத்துவஞானி பெரும் பங்காற்றியுள்ளார். அவரைத் தொடர்ந்து கிரேக்கத் தத்துவஞானி டெமாக் ரீட்டஸ் பொருளைப் பற்றிய அணுத்தத்துவத்தை முன்வைத்து பொருள் முதல்வாதக் கோட்பாட்டை மேலும் வளர்த்தார்.

இவரைத் தொடர்ந்து கி.மு. 43ம் நூற்றாண்டுகளிலும் கி.மு. முதலாம் நூற்றாண்டுக ளிலும் முறையே எபிக்குரஸ் என்ற கிரேக்கத் தத்துவஞானியும் ரோமன் தத்துவஞா- னியான டைடஸ் ஒக்கரைட்டியஸ் காரஸ் என்பவரும் பொருள் முதல்வாத அணுத் தத்துவத்தை மேலும் வளர்த்தார்கள். அன்றைய காலத்தில் இதற்கு எதிராக கிரேக் கத்தத்துவஞானி பிளாட்டோ (கி.மு.427 347) அணுத் தத்துவத்தையும், பொருள் முதல்வாதத்தையும் எதிர்த்த கருத்து முதல்வாதி.

பிளாட்டோவின் வெளிப்படையான கருத்து முதல் வாதத்திற்கு எதிராக (கி.மு. 384-322) அரிஸ்டாட்டில் கடுமையாக விமர்சனம் செய்தவர். இவர் அடிப்படையில் பொருள் முதல்வாத உலகக் கண்ணோட்டமுடையவர். இருந்த போதிலும் கருத்து முதல்வாத எண்ணவோட்டங்களும் இவரிடம் இருக்கவே செய்தன. கி.பி. 17ம் நூற் றாண்டுகளில் பொருள் முதல்வாதச் சிந்தனை மேலும் வலுப் பெற்றது. பிரஞ்சுத் தத்துவஞானி பிரான்ஸ்லின் பேக்கன் (1561 1625) பொருள் முதல்வாதக் கண் ணோட்டத்திற்கு மிகப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார். இவரைத் தொடர்ந்து ஆங்கிலேயத் தத்துவஞானி தாமஸ் வேறாப்ஸ் (கி.பி.1588 1679) பேக்கனுடைய பொருள் முதல்வாதச் சிந்தனையை மேலும் வளர்த்தார். 18ம் நூற்றாண்டில் இரசி யப் பொருள் முதல்வாதிகளில் குறிப்பிடத்தக்கவர்கள், மைக்கேல் லோமோனோ சோவ், அலெக்சாண்டர் ராதிஷ் சேவ் ஆகியோர் முதன்மையானவர்கள். அதேபோல் இந்திய ஆட்சிப் பகுதியிலும், தமிழகத்திலும் பொருள் முதல்வாதச் சிந்தனையாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் பெரும் பங்களிப்பு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியச் சமூக அமைப்பில் பார்ப்பன வேத மந்திரங்களே கருத்து முதல்வாதத்திற்கு பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது. பார்ப்பனர்களின் வேத, யாக கருத்தமைவு என்பது வெறும் கருத்து முதல்வாத அளவுகோலோடு மட்டும் அவர்கள் தத்துவம் இருக்க வில்லை. அது சமூக ஒடுக்குமுறைகளையும், ஏற்றத் தாழ்வுகளையும், வெளிப்படை யாக வலியுறுத்தி விரிந்த உலகப் பார்வையைக் கொண்டதல்ல. குறுகிய தங்களின் ஆளுமைத் தன்மை நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட தத்துவங்கள்தான். வேதகா லத் தத்துவங்கள், இருந்த போதிலும் இது உலகத்தைப் பற்றியும் பேசுகிறது.

## ♦ ரிக் வேதம்

ஆரியர்களின் வேத காலம் கி.மு.1500 இக்காலத்தில் தான் "ரிக் வேதம்', "சாம வேதம்', "யஜ/ர் வேதம்' அதர்வ வேதம் என நான்கு வேதங்களை உருவாக்கினார்கள். அதற்க டுத்து மனு எழுதிய "மனு சாஸ்திரம்' அடுத்து வந்த "பகவத் கீதை' போன்றவை ஆரி யத் தத்துவ இயலை வெளிப்படுத்தும் தத்துவ நூலாகும். இதுவே இந்தியக் கருத்து முதல் வாதத் தத்துவமாகவும் அறியப்படுகிறது. இதைக் கடந்து பல்வேறு கருத்து முதல்வாதத் தத்துவங்களும் இருக்கிறது. இருந்த போதிலும் கி.மு. 1500 ரிக் வேத காலம் தொடங்கி இன்று வரை ஆரியத் தத்துவங்களை முதல் நிலையில் இருப்பதால் இதையே நாமும் முதன்மைப்படுத்துகிறோம். மேலும் இவ் ஆரியத் தத்துவம் கருத்து முதல் வாதத்தை எதிர்த்தே அனைத்துப் பொருள் முதல்வாதச் சிந்தனைகளும் உருவானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ♦ உபநிடதம்

கி.மு. 8ம் நூற்றாண்டுக்குப் பிறகு பொருள் முதல் சிந்தனைகள் வெளிப்பட்டன. குறிப் பாக இந்தக் கால கட்டத்தில் "உபநிடதம்' தோன்றின. (இதில் வேதத்தை ஏற்றுக் கொண்ட கருத்து முதல் வாத உபநிடதங்களும் பெருமளவில் இருந்தன) குறிப்பாக "முண்டக உபநிடதம்' பிரம்மத்தைப் பற்றி இவ்வாறு கூறுகிறது:

**"பிரம்மம் பிறப்பற்றது் இறப்பற்றது.**
**அது எதிலிருந்தும் தோன்றவில்லை் எதையும் தோற்றுவிக்கவில்லை.**
**அது பிறந்ததும் இல்லை் இறந்ததும் இல்லை.**
**அது நித்தியமானது. ஊழிக் காலமாய் இருந்து வருகிறது.**
**அதன் உடல் துண்டிக்கப்பட்டாலும் அது துண்டிக்கப்படுவதில்லை"**

இப்படி ஏராளமான உபநிடதங்கள் உலகம் இயற்கையானது. உலகத்தை யாராலும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

படைக்க முடியாது. படைக்கவும் இல்லை. கடவுள், சொர்க்கம், மறுபிறப்பு என்று எதுவு மில்லை என்று சொல்கிறது.

### வைசேசியம் கணாதர்

கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் "கணாதர்' என்பவர் வைசேஷிக சிந்தனையைத் தோற்றுவித்தார். (விசேசமானது என்ற பெயராலும் அழைக்கப்பட்டது) அது உலகின் தோற்றத்தை இயற்கையைச் சார்ந்தே வெளிப்படுத்தியது. மேலும் உலகத் தோற்றத்தின் காரணம் அணுவே என்று விளக்கியது. அணுக் கொள்கையை விரிவாக ஆய்வு செய்தது. கணாதர் பொருள் முதல்வாதச் சிந்தனைவாதி.

### நியாயம் கவுதமர்

கி.மு. 6 ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் கவுதமர் நியாயக் கோட்பாட்டை உருவாக்கினார். நியாயம் என்ற சமஸ்கிருதச் சொல் "ஆய்வுப் பொருளை நாடிச் செல்லுதல்' என்று பொருள்படும். அதாவது தருக்க முறையில் காரண காரியங்களைப் பகுத்தாய்தல் என்பதாகும். அதாவது தீர்வை எட்டுதல் என்பதே நேரடிப் பொருளாகும். கவுதமர் வைசேஷிகர்களின் அணுக் கொள்கையையும் ஏற்றுக் கொண்ட பொருள் முதல்வாதி. நியாய மரபின் அடிப்படை தர்க்கவியலை அடிப்படையாகக் கொண்டது.

### சாங்கியம் கபிலர்

கி.மு. 7ம் 6ம் நூற்றாண்டுகளின் இடைப்பட்டக் காலத்தில் வாழ்ந்தவர் கபிலர். இவர் தோற்றுவித்த சிந்தனை மரபு சாங்கியம். சாங்கியம் என்ற சொல் (கணக்கிடுதல்) சாங்கிய என்ற சமஸ்கிருத வேர்ச் சொல்லிலிருந்து கிளைத்தது. உலகின் படிமுறைச் செயல்பாடுகளைப் பகுத்தறிவுடன் கவனித்து விளக்கம் கூறுவதால் சாங்கியம் என்ற பெயர் பெற்றது. சாங்கியக் கருத்துக்கள் வெறுமனே மெய்ஞானச் சிந்தனை மரபு மட்டுமல்ல. பிரபஞ்சத்தின் ஆற்றல்களை மாற்றுதலும், அழித்தலும், திரட்டுதலும் பற்றிய அறிவியல் அடிப்படையிலான விளக்கமும் ஆகும்.

கபிலர் வேத, யாக தத்துவத்திற்கு எதிரான மிகப் பெரிய பொருள் முதல்வாத சிந்தனைவாதி. "புலனுறுப்புகள் இயற்கையின் உருவாக்கமே' புலனுறுப்புகள், புறவுலகு பற்றிய உண்மையான தோற்றத்தை அப்படியே நமக்குப் புலப்படுத்துகிறது என்பது கபிலரின் திட்டவட்டமான கூற்று. இல்லாத ஒன்றிற்கு எதுவுமே உருவாகாது என்பதே சாங்கியத்தின் ஆதாரக் கொள்கை. மேலும், சாங்கியம் அறிவியல் வழிப்பட்ட தர்க்க முறைகளையும், பரிணாமக் கோட்பாடுகளையும் சாங்கிய மெய்ம்மை ஏற்றுக் கொள்கிறது. ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கபிலர், பார்ப்பனியக் கருத்தியலை முற்றாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்த புரட்சியாளர். இவர் காலத்திற்கு பிறகு தொடங்கி இன்று வரை பார்ப்பன எதிர்ப்பு சிந்தனை மரபுகளின் நீட்சியாக சாங்கியம் இருந்தது, இருக்கிறது. சாங்கி யத்தை பார்ப்பனியம் சிதைத்து அழித்து விட்டாலும் அதன் சிந்தனை மரபு தொடர்கி றது.

## லோகாயதவாதம் பிரகஸ்பதி

"லோகாயதாம்" சரியான காலத்தை குறிப்பிட முடியவில்லை. ஒரு சிலர் கி.மு. 6 ம் நூற்றாண்டு என்றும், ரிக் வேத காலத்திலேயே இந்து இதிகாங்களில் இதுபற்றி குறி-ப்பு இருப்பதாகவும் கூறுகின்றனர். குறிப்பாகப் பிரகஸ்பதியின் லோகாயதா சூத்திரம். கி.மு.600 களில் அழிக்கப்பட்டது. ஆரியப் பார்ப்பனர்கள் எதிர்ச் சிந்தனை என்ற அடிப்படையில் இதன் மீதான எதிர்ப்பின் பதிவுகளே இப்பொருள் முதல் வாதச் சிந்-தனையின் மகத்துவத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது. லோகாயத்தை அசுரர்களின் கோட்பாடு என்றே பார்ப்பன வேத நூல்கள் கூறுகின்றன.

லோகாயதா என்றால் "உலக மக்களுக்காக" என்பதாகும். பொறிக் காட்சிகளில் உணரப்படுபவை மட்டுமே லோகாயத மரபில் திடமான சான்றுகளாக எடுத்துக் கொள் ளப்படுகின்றன. சான்றாகக் கூறப்படும் பருப்பொருள்கள் மண். நீர், நெருப்பு, காற்று, செல்வமும், மகிழ்ச்சியுமே மனித வாழ்வின் தேவைகள் பருப்பொருட்களுக்கு உணர்வு உண்டு. வேறு உலகம் என்று ஒன்றில்லை. இறப்புக்குப் பின் எதுவு மில்லை என்பது இதன் தத்துவமாகும். சிறந்த பொருள் முதல் வாதமான லோகாய-தம் சாதி, வேதம், யாகம் போன்ற எல்லாப் பிற்போக்குத் தனங்களையும் இரக்கமின்றி விரிவாக, விரிவான விளக்கவுரையுடன் எழுதப்பட்டது. இது இந்தியாவின் பொருள் முதல்வாதத் தத்துவமாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. சமணமும் பௌத் தமும் தோன்றுவதற்கு சார்வாகரின் (லோகாயதம்) தத்துவம் அடிப்படையானது.

## பௌத்தம் புத்தர்

கி.மு. 543ம் ஆண்டு வாக்கில் சாக்கிய மன்னன் சுத்தோ தனனுக்கும், அரசி மாயா தேவிக்கும் மகனாகப பிறந்த சித்தார்த்த கௌதமன், பார்ப்பன வேத, சமயத் தத்து வங்களைத் தோலுரித்தார். இவர் இயற்கையின் நிகழ்வுகளையும், அதன் இயக்கப் போக்குகளையும் ஏற்கிறார். "உலகிலுள்ள அனைத்துமே நிலையற்றவை. பிறப்பும், இறப்பும் தொடர் நிகழ்வுகள். வாழ்க்கை என்பது நீரோட்டம் போன்றது. வருவதும் போவதும் மெய்ம்மையின் அடிப்படை என்றார். இவருடைய சிந்தனைகள் பெரும்பாலும் மனித வாழ்க்கையை பிரதிபலிப்பதாகவே இருக்கிறது. இல்லாத ஒன்றைப் பற்றி இவர் அதிக மாகச் சிந்திக்கவில்லை. இவரின் செயல், தருக்க முடிவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகள் அனைத்தும் பார்ப்பன வேத மரபுகளை முற்றாக எதிர்த்தது. இவ் எதிர்ப்பில் எவ்வித இரக்கமும் காட்டவில்லை.

இவரின் தத்துவம் பொருள் முதல் வாத தர்க்கவியலைக் கொண்டிருந்தாலும், அதாவது அணுக் கொள்கையின் அடிப்படையில் உலகம் பற்றிய தங்களது சொந்தக் கருத்துக்களை உருவாக்கிக் கொண்ட பௌத்த மதத்தினர் வாழ்க்கையைப் புறவயமானது (பருப் பொருள்) அகவயமானது (மன உணர்வு) என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்தார்கள். அணுக்களின் கூட்டு, அதாவது தனிமங்களின் வினோதமான சேர்மானத்தைச் சார்ந்துதான் மன உணர்வு உள்ளது. எனவே, புறப் பொருட்களின் செயல்பாட்டிலிருந்து தான், அக உணர்வு உருவாகிறது. அணுக்களின் கூட்டு ஓர் இயக்கத்தை உண்டு பண்ணுகிறது. அந்த இயக்கம் இருத்தலின் பகுதிகளாகிய உணர்வாகவும், அரிதலாகவும் வெளிப்படுகிறது என்பது புத்த மதத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். இதையும் அறிவுக்குப் பொருந்தி நிற்கின்றனவா என்று ஆய்ந்தறிந்து அதன் பின்பு அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்பதே புத்தரின் அறிவுரையாக இருந்தது. இருந்த போதிலும் கடவுள் மறுப்பிறப்பு பற்றி தெளிவான முடிவுக்கு அவர் வந்தடையவில்லை.

- சமணம் மகாவீரர்

புத்தருக்கு முந்தைய காலத்தவரான (கி.மு. 598) வர்த்தமானர் (மகாவீரர்) புத்தருக்கு இணையான சிந்தனையாளராக இருந்தவர். இவர் சமண மதத்தை நிறுவினார் (ஜைனம்). இதன் அடிப்படைக் கொள்கையாக,

1. இருத்தல் மீது உண்மையான நம்பிக்கை.
2. உள்ளதை உள்ளமபடியே அய்யமின்றித் தெளிவாக அறிவது.
3. புற உலகப் பொருட்கள் மீது விருப்பமின்றி வாழும் நல்ல நடைமுறை.

இதுவே சமணர்களின் அடிப்படையாகும்.

1. கொல்லாமை
2. வாய்மை
3. கள்ளாமை
4. நியமங்களைக் கடைப்பிடித்தல்
5. பொருளாசை இல்லாமை போன்ற ஒழுக்க நெறிகளை வகுத்துச் செயல்பட்டனர்.

மகாவீரர் கடவுள் வழிபாட்டை முழுவதும் தடை செய்தார். கடவுள் என்று ஒன்று இல்லை. உள்ளது உலகு மட்டுமே. பாவம் என்பது கடவுளுக்கு எதிரானது அல்ல. அது சக மனிதனுக்கு எதிரானது என்பது சமணர்களின் உறுதியானக் கொள்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமணமும் பௌத்தம் போலவே பார்ப்பன வேத, யாக வேள்வித் தத்துவத்திற்கு எதிரானது. இதன் தத்துவங்கள் வாழ்வின் தேவையிலிருந்து உருவானவை. சமணமும் பொருள் முதல்வாதச் சார்புடையதே! இப்படி கருத்து முதல்வாதச் சிந்தனைக்கு எதிராக பொருள் முதல்வாதச் சிந்தனைகள் தோன்றினாலும் அது ஒரு வடிவம் பெறாமல் தன்னை முழுமையாக மீட்டுருவாக்கம் செய்து கொள்ளாமல் காலப் போக்கில் கருத்து முதல்வாதச் சிந்தனைகளோடு கலந்து போயின. இதற்குக் காரணம் என்ன? என்ற கேள்வியைக் கேட்டு வைத்துக் கொள்வோம்.

- தொல்காப்பியர்

3000 ஆண்டுகளுக்கு முன்பாக தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம் வெறும் மொழி இலக்கண நூல் மட்டுமன்று. வாழ்வியல் இலக்கணமும் இரண்டறக் கலந்த மெய்யியல்தான் தொல்காப்பியம். இதில் உலகை வாழ்வை புறம், அகம் என்று பிரிக்கப்பட்டு விளக்குகிறது. மேலும் உலகத்தின் மூலமே பொருள்தான் என்றும், அது முதல், கரு, உரிப் பொருள்தான் என முப்பொருள்களைக் கொண்டது என்றும் விளக்குகிறது. இதில் முதல் பொருள் நிலம், பொழுது என்றும் கூறுகிறது.

(பொருள்கள் மூன்று (தொல்காப்பியம்))

949. முதல் கரு உரிப் பொருள் என்ற மூன்றே
நூலலுங்காலை முறை சிறந்தனவே
பாடலுள் பயின்றவை நாடும் காலை.

முதல் பொருள்

950. முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பு என மொழி இயல்பு உணர்ந்தோரே)

தொல்காப்பியரை முழுமையான பொருள் முதல்வாதி என்று நாம் சொல்ல முடியாது. புற, அக வாழ்வை முன்னிறுத்துதலின் வழி இவர் "இருமை வாதியாக" இருந்துள்ளார். இருந்த போதிலும் இயற்கையின் ஒழுங்குமுறை இயக்கத்தை ஏற்று அதன் வழி எதார்த்த வாழ்விற்குத் தேவையான ஒழுக்க விதிகளை இயற்கை விதிகளோடு விளக்கியிருப்பது இதன் சிறப்பு. கடவுள், மதம் சம்பந்தமான நேரடியான கருத்து முதல் வாத அடிப்படை களை இவர் வலியுறுத்தவில்லை. மாறாக பொருள் முதல்வாத சார்பு சிந்தனையின் தர்க்கமுடையவராகவே இருந்துள்ளார். மொழியின் இயற்கை அமைப்பையும், மனித வாழ்வின் இயற்கை அமைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் இலக்கணமாக்கிய தமிழகத்தின் முதன்மையான சிந்தனையாளர்.

## திருவள்ளுவர்

2000 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த திருவள்ளுவர் ஒரு பொருள் முதல்வாதச் சிந்தனையாளர். அவரின் சிந்தனைகள் அனைத்தும் இவ்வுலகின் இருப்பு நிலை களைப் பற்றியதே! இல்லாத ஒன்றை அவர் எப்போதும் எங்கும் சொன்னதில்லை. திருக்குறளில் வரும் கடவுள் வாழ்த்துப் பகுதி என்பது இடைக் காலத்தில் செறுகப்பட்ட இடைச் செறுகளே! கடவுளின் தேவை திருக்குறளில் எந்த இடத்திலும் இல்லை. எல் லாவற்றையும் மனிதனே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்கிற இயற்கை சார்ந்த நடைமுறை வாழ்வியல் தத்துவமே திருக்குறள்.

* *எப்பொருள் எத்தன்மைத் தாயினும், அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு.*

* *பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பெனும்*
*செம்பொருள் காண்ப தறிவு.*

போன்ற குறள்கள் பொருள் வாதத் தத்துவத்தைச் சார்ந்தவை. அதுபோல் வான் சிறப் பில்.

* *வானின் றுலகம் வழங்கி வருவதால்*
*தானமிழ்தம் என்றுணரற் பாற்று.*

* *நீரின் றமையா துல கெனின் யார்யார்க்கும்*
*வானின் றமையா தொழுக்கு.*

இக்குறள் உலக உயிரினங்களின் உருவாக்கத்திற்கு நீரே ஆதாரம். நீரில்லையேல் இவ்வுலக உயிரினங்கள் இல்லை என்று சொல்கிறது. "சார்லஸ் டார்வினின் உயிரி யல் தத்துவத்தின் கோட்பாட்டை 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். இவ்வுலகின் தோற்றத்திற்கு பொருளே ஆதாரம். உயிரினங்க-ளின் தோற்றத்திற்கு நீரே ஆதாரம். இங்கே கடவுளுக்கு என்ன வேலை? எனவே திருவள்ளுவர், அய்யத்திற்கு இடமற்ற பொருள் முதல்வாதிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தர்கள்

தமிழகத்தில் சித்தர்களின் சிந்தனைகள் பெரும்பாலும் இயற்கை சார்ந்தவைகளே. இருப்பு உலகைப் பற்றியே அதிகமாகச் சிந்தித்தனர். கடவுள், மறுபிறப்பு, சொர்க்கம் என்ற இல்லாத ஒன்றுக்காக எப்போதும் கவலைப்படாமல் இயற்கையின் உண்மை களை ஏற்றுக் கொண்டார்கள். அணுக் கோட்பாடுகளையும் பெரும்பான்மையான சித் தர்கள் ஏற்றுக் கொண்டனர். இவர்கள் சாதி, மதம் போன்ற பிற்போக்கு அமைப்புகளை மறுதலித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே சித்தர்களில் பெரும்பாலானோர் பொருள் முதல்வாதச் சிந்தனைச் சார்பாளராக இருந்துள்ளனர். இப்படி உலகம் முழுவ தும் கருத்து முதல்வாத உலகக் கண்ணோட்டத்திற்கு எதிராக பொருள் முதல் வாதச் சிந்தனையாளர்களும் பொருள் முதல் வாதத்தத்துவங்களும் இருந்தன. இருந்த போதி லும் இதை முழுமைப்படுத்தியது மார்க்சும், எங்கல்சும்தான். சமூக நோக்கில் இவ்விரு தத்துவங்களின் செயல்பாடுகளை ஆராய்ந்து அறிந்தனர். குறிப்பாக கருத்து முதல் வாதத் தத்துவத்திற்கும், பொருள் முதல்வாதத் தத்துவத்திற்கும், இருவேறு வர்க்கக் கண்ணோ -ட்டங்கள் உண்டென வெளிப்படுத்தினார்கள். இதனடிப்படையில் உருப்பெற்ற தத்துவம் தான் இயக்கவியல் வரலாற்றுப் பொருள் முதல் வாதம். இது உலகப் பொருள் முதல்வாதத் தத்துவத்திற்கு புதிய வெளிச்சத்தைக் கொடுத்தது.

நன்றி : கீற்று இணையம்

## சொல்லிவிட்டுச் செல்..

-கவின் மகள்-

மனம் மொழிந்தது
வார்த்தையில் இல்லை..
எண்ணச்சாளரங்கள் வழி
பல்லாயிரம் கனாக்கள்..
வானவில்லின் வண்ணம்
தோற்கும் பருவ மாறுதல்கள்..!
எழுதி மடித்து வைத்த
சின்னச் சின்னக் கவிதைகள்
அப்படியே
அதே மௌனித்த மொழிகளுடன்...
காதோடு மொழிவதற்கான
சேதிகள் காத்துக்கிடக்கின்றன..
தேடப்படாத பழைய செய்தித்தாள் போல.
இன்னும் விடியாத காலையிருளில்,
கனவு களையாத
குழந்தையின் தாய்மடிதேடும்
அதே சிணுங்கலுடன்
மண்டியிட்டுக் கேட்கிறேன்...
ஒற்றைவரியில் ஒருதரமாய்
சொல்லி விட்டுச் செல்
"நீயே என் உயிர்" என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசையும் நிழல்

காரையன் கதன்

நான் தூங்கும் போது
என் நிழலை
அசைத்துப் பார்க்கிறது
காற்று.

இறக்கைகள் ஆற
அமர வந்த
பறவைக்கு
ஏமாற்றம் மீதமாக
சிறிது நேரம் காற்றை
காத்திருக்க கேட்கிறேன்.

அமர்ந்த பறவை
இரையை கண்டதும்
எழுந்து
பீச்சி விட்டு
பறந்து செல்கிறது.

எச்சத்தில்
கலைந்த தூக்கம்
புழுக்கத்தால்
நனைந்த உடலில்
பிசுபிசுப்பாக

காற்றை
தொடர சொல்கிறேன்
என்னுடன்
அசைந்து கொண்டிருக்கிறது
நிழல்.

# கழனி முத்தம்

பூட்டன் உழுத நிலம்
பாட்டன் சுமந்த பலம்
வானம் பொழிந்த மழை
மானம் காத்த உலை
இருளை விரட்டிய ஞாயிறு
வெளிச்சத்தை விரட்டிய நிலவு
சொந்தம் பெட்டகத் திறப்பு
விடுதலை புத்தகத்தின் பிறப்பு.

-நல்லை அமிழ்தன்-
கொழும்பு

# சங்கப் பலகை

முச்சை கட்டாத பட்டம்
மூச்சை விற்காத முத்தம்
அச்சம் மறந்த அகரம்
பிச்சை எடுக்காத உயரம்
பேதம் நோக்காத வைரம்
தாகம் தீர்க்கும் மதுரம்
தமிழை வளர்க்கும் சிகரம்.

-வாலிதாசன்-
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மட படைப்பாளி

## அஸ்ரபா நூர்தீன்



திருக்கோணமலை மத்திய வீதியில் வசித்து வந்த நூர்டீன் மற்றும் ஜெமீலாஉம்மா தம்பதிகளுக்குப் புதல்வியாக 'அஸ்ரபா' பிறந்தார். தனது தொடக்கக் கல்வியை தரம் 1 தொடக்கம் தரம் 3 வரை பெருந்தெரு விக்நேஸ்வரா வித்தியாலயத்திலும் தரம் 4 தொடக்கம் க.பொ.த(சா/த) வரை கஞ்சிமடம் மகா வித்தியாலயத்திலும்(திருக்கோண-மலை விபுலாநந்தாக் கல்லூரி) உயிரியல் பிரிவில் உயர்தரத்தினை திருக்கோண-மலை சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரியிலும் சிறிது காலம் மூதூர் மத்திய கல்லூரியிலும் கற்றிருக்கிறார்.

1980 ஆம் ஆண்டில் தனது இலக்கியப் பணியினைக் கவிதை மூலமாக இலங்கை வானொலியூடாகத் தொடங்கிய 'அஷ்ரபா நூர்டீன்' அவர்கள் தொடர்ந்து சிந்தாமணி, தினகரன், பாமிஸ், சரிநிகர் போன்ற நாளேடுகளிலும் சுடர் எனும் மாத இதழிலும் ஈரோஸ் தோழர் ராஜகபூர் அவர்களின் 'சங்கப்பலகை' எனும் கையெழுத்துப் பிரதியிலும் தனது படைப்புகளைப் படைத்து வந்திருக்கிறார். கவிதையில் தொடங்கிய பாலையூற்று அஷ்ரபா நூர்டீன் அவர்களின் எழுத்துப் பணி சிறுகதை, நாடகம், வானொலி நாடகம், வரலாற்று நிகழ்வுக் குறிப்பாக்கம், சமூகச் சித்திரம் போன்ற படைப்புகள் மூலமாக விரிவடைந்தது.

இலங்கை வானொலியில் நடாத்தப்படுகின்ற 'முஸ்லிம் நிகழ்ச்சி'யில் இவரது நாடகங்கள் 'இலங்கை வானொலி' நேயர்களை மிகவும் கவர்ந்திருந்தன. இருபதிற்கு (20) மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதியிருக்கிறார். "நண்பன், அவர்கள் நடக்கிறார்கள், பாதை மாறிய பயணம், அவன் நாடினால், மனம் மாறிய போது, சிதறுகின்ற சிந்தனைகள், சிறகொடிந்த வண்டு, உறங்காத உண்மைகள், ஒரு பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுகிறது." ஆகியவை அக்காலத்தில் வானொலி நேயர்களால் பெரிதும் பேசப்பட்ட வானொலி நாடகங்களாகும். "குட்டையில் கிடந்த குண்டுமணி, அர்த்தமற்ற பயணங்கள், இது கனவு அல்ல" ஆகியவை இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகி அநேகமான இலங்கையரைக் கவர்ந்த சிறுகதைகளாகும். இலங்கை வானொலியில் "மாதர் மஜ்லிஸ்" நிகழ்ச்சியில் கவிதை, வரலாற்று நிகழ் வுக் குறிப்பாக்கம் போன்றவற்றை எழுதி வந்ததுடன் பலரது படைப்புகள் 'பாலை யூற்று அஷ்ரபா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நூர்டீன்' அவர்களின் குரலில் ஒலிபரப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் "ஊடுருவல்" நிகழ்ச்சியில் சமூகச் சித்திரம் நிகழ்ச்சி இவரால் தயாரித்து வழங்கப்பட்டு வந்ததும் நினைவுகூறத்தக்கது. இவரது கவிதைகள் 'வெரிதாஸ்' வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பட்டன. அத்துடன் இவரது பல கவிதைகள் மொழி பெயர்க்கப்பட்டு மேலைத்தேய நாடுகளில் வாசகர்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருக்கோணமலையில் நடைபெறுகின்ற தமிழ்மொழிநாள் போட்டிகளில் நடுவராக அழைக்கப்படுகின்ற பாலையூற்று அஷ்ரபா நூர்டீன் அவர்கள் பெண்கள் தொடர்பான நிகழ்வுகளுக்கு உரையாளராக அழைக்கப்பட்டும் வருகின்றார். இவரது படைப்புகளில் அநேகமானவை பெண்கள் உரிமை பேசுபவையாகவும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பவையாகவும் சிறுவர் நலன் பேணுபவையாகவும் போதைப்பொருள் பாவனைக்கு எதிரானதாகவும் காணப்படுவதனால் பாலையூற்று அஷ்ரபா நூர்டீன் அவர்கள் நற்சிந்தனையாளர்களால் பெரிதும் விரும்பப்படுகின்ற ஓர் இலக்கியவாதியாக திருக்கோணமலையில் மிளிர்கின்றார். தற்போது முகநூல் வாயிலாக தனது படைப்புகள் மூலமாக தனது கருத்துகளைச் சொல்லிவருகின்றார்.

## அச்சுருவாக்கப்பட்ட படைப்புகள்.

1. "ஆகக் குறைந்தபட்சம்" எனும் கவிதைத் தொகுப்பு 2012ஆம் ஆண்டு 36 கவிதைகளை உள்ளடக்கியதாக இவரால் வெளியிடப்பட்டது.
2. "நேசிப்பு" எனும் 'கவிதை-ஓவிய நூல்' கமலா வாசுகி அவர்களது ஓவியத்துடன் 2016ஆம் ஆண்டு 'சிறகுநுனி' அமைப்பினால் இன நல்லுறவினை முன்னிறுத்தி வெளியிடப்பட்டது.

*தொழில்:*

1987-1988 ஆண்டுகளில் மட்கோ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தொண்டராசிரியராக கடமையாற்றினார் 1989.05.10 ஆம் நாளிலிருந்த வடக்குக்கிழக்கு மாகாண சபையில் எழுதுவினைஞராக தற்காலிக நியமனம் கிடைக்கப்பெற்றார். 1991 ஏப்பிரலில் நிரந்தர நியமனத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மாவட்டத் தொழில் திணைக்களம் ஆகிய இடங்களில் பணியாற்றியிருக்கிறார். பாலையூற்று அஷ்ரபா நூர்டீன் அவர்கள் திரு.அ.வா.முஹ்சீன் அவர்களைத் திருமணம் முடித்து இரு ஆண் பிள்ளைகளின் தாயாகவும் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திராணி

இ. நேமிநாதன்


எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு தொலைபேசியில் ஒரு அழைப்பு வந்தது. "ஜே.கே உங்களோடு நான் ஒரு முக்கியமான விடயந்தொடர்பாக நேரில் பேசவேண்டும், முடியுமா?" அதற்கு ஜெயகாந்தன் மிக நிதானமாக "இன்று முடியாது. இப்போது முக்கியமான வேலையில் இருக்கிறேன், அதன் பின்னர் நான் நண்பர்களுடன் மது அருந்துவதற்கு நேரத்தை ஒதுக்கிவிட்டேன். நாளை உங்களுக்கு நேரம் இருந்தால் வீட்டுக்கு வாருங்கள். சந்திக்கலாம்." என்று மிகச்சாதாரணமாக, இயல்பாகச் சொல்லிவிட்டார். ஜெயகாந்தனைச் சந்திக்க விரும்புவதாகச் சொன்னவர் வேறுயாருமல்ல MGR தான். அப்போது அவர் நடிகர் MGR அல்ல தமிழ்நாட்டின் முதலமைச்சர் MGR. அவரைச் சந்திப்பதற்கு புதுடில்லியே நேரம் கேட்டுத் தவமிருந்த காலமது. அந்தக் காலத்திற்தான் ஜெயகாந்தன் இப்படிச்சொன்னார்.

ஜெயகாந்தன் ஓர் எழுத்தாளர் அவ்வளவுதான். பணம், பதவி எதுவுமேயில்லை ஆனாலும் ஒரு முதலமைச்சர் சந்திக்கவேண்டும் என்று நேரங்கேட்டாலும். தன்னிலை, இயல்பு, தனது திட்டம் என்று எதையுமே மாற்றிக்கொள்ளாது இயல்பாகவே இருந்ததார், இயல்பாக இருப்பதற்குப் பதவிகள் எதுவும் அவசியமே இல்லை என்பது ஜெயகாந்தன் தனது எழுத்துகளைத் தாண்டி நமக்கு சொல்லி விட்டுச்சென்றது எனலாம். ஒருவேளை MGR அவர்கள் ஜெயகாந்தன் அவர்களது மேற்படி நடவடிக்கைக்காக அல்லது இப்படிப் பேசியதற்காக "எனது பதவிநிலை இவனுக்குத் தெரியுமா? எனது பதவி தெரியுமா? தகுதி தெரியுமா? அவனுக்கு என்ன தகுதியிருக்கிறது? பதவியிருக்கிறது?" என்று தையாத்தக்காவெனக் குதித்திருந்தாலும். அது அவருடைய பிரச்சினை என்று ஜே. கே இயல்பாகவே இருந்திருப்பார். உண்மையாகவும், நேர் மையாகவும், சரியாகவும் இருப்பதற்குப் பதவி அவசியமில்லை. அறமும் தெளிவும் இருந்தால் போதும். பதவியால் மனிதர்களை வாங்கமுடியும் ஜெயகாந்தன்களை வாங்கமுடியாது.

நமது அன்றாட வாழ்விலும் பல ஜெயகாந்தன்களைக் காணலாம். நான் பல ஜெயகாந்தன்களோடு பழகியிருக்கிறேன். நமது பந்தா. பம்மாத்து எல்லாம் அவர்களிடம் எடுபடாது. உன்னிடம் அது இல்லை, இது இல்லை என்றுவேறு பலமுறை அவர்களிடம் சுட்டிக்காட்டியிருக்கிறேன். பெரும்பாலும் அதற்கு அவர்களது பதில் "எனக்கெதற்கு அதுவெல்லாம்?" என்பதுதான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கட முற்றம் !

-யாழினி
கொழும்பு-

பூட்டன் சிந்திய வியர்வை– எங்கட முற்றம்
பூட்டி சுமந்த ஆபரணம்– எங்கட முற்றம்
பாட்டன் சேமித்த பெட்டகம்– எங்கட முற்றம்
பாட்டி தேடிய புத்தகம்– எங்கட முற்றம்
அப்பா தந்த கல்வி– எங்கட முற்றம்
அம்மா தந்த பிள்ளைகள்– எங்கட முற்றம்
எழுவான் நிலவின் கவிதைகள்– எங்கட முற்றம்
என்றும் என்றும்
அணையாத் தமிழ் அமுதம் – எங்கட் முற்றம்



# பெண்கள் உள்ளம் !

கந்தவனம் கோணேஸ்வரன்

ஏழ்மைகூட இன்பமாகும்
இணைந்தே நாமிருந்தால்
பாழும்மனதிலும் பசுமைவிளையும்
பண்புடன் நாம்வாழ்ந்தால்.


செல்வம் என்பது புறத்திலல்ல
சிந்தனை சிறந்திருந்தால்
வெல்வோம்என்பதும் உடலிலல்ல
வீரிய மனமிருந்தால்.

பெண்கள்ஆணிற் குறைந்தோரல்லர்
பெருமை தனையுணர்ந்தால்
கண்கள்என்பவை காதலுக்கல்ல
கடமையிற் கருத்திருந்தால்.

இருந்திடும்வரையில் இனிதேவாழ்வோம்
இதயந் திறந்திருப்போம்
வருத்திடும்செயல்கள் தம்மைவருத்தி
வாழ்விற் சிறந்திருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னம்பிட்டி தமிழ்க்கிராமத்தில் தமிழ், தெலுங்கு மொழிச் செப்புப் பட்டயம் கண்டுபிடிப்பு !

பேராசிரியர் ப. புஸ்பரட்னம்

பொலநறுவை - மட்டக்களப்பு பிரதான வீதியுடன் இணைந்திருக்கும் **************

மன்னம்பிட்டிப் பிரதேசம் என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடமகும். வரலாற்றுத் தொடக்க காலத்தில் இருந்து கிழக்கிலங்கைக்கு உட்பட்டிருந்த இப்பாரம்பரிய பிரதேசமானது பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இருந்து நிர்வாக வசதிக்காக பொலநறுவை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இப்பிரதேச எல்லைக்குள் முக்துக்கல், சமணன்பிட்டி, தம்பன்கடவை, கருப்பளை கண்டக்காடு, சொறிவில் திரிகோணமடு, கல்லூர், பிள்ளையாரடி ஆகிய பழம்பெரும் தமிழ்க் கிராமங்கள் காணப்படுகின்றன. மக்கள் வாழாத இக்கிராமங்கள் சிலவற்றின் ஒதுக்குப் புறங்களில் கைவிடப்பட்ட வயல் நிலங்கள், காடுகள், சிறு மலைகள், ஆதிகால மக்கள் வாழ்ந்த கற்குகைள் என்பன காணப்படுகின்றன. இவ்வாதாரங்கள் இக் கிராமங்களுக்குத் தொன்மையான தொடர்ச்சியான வரலாற்று மரபு இருப்பதை உறுதி செய்வதாக உள்ளன. இந்த உண்மையை இக்கிராமங்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன இந்து, பௌத்த ஆலயங்கள், ஆலய எச்சங்கள் மேலும் உறுதி செய்கின்றன. அவ்வாறான வரலாற்றுப் பழைமைவாய்ந்த ஆலயங்களில் ஒன்றே தற்காலத்திலும் வழிபாட்டிலிருந்து வரும் தம்பன்கடுவையில் உள்ள சித்திரவேலாயுதர் கோவிலாகும்.

இவ்வாலயம் தோன்றிய காலத்தை உறுதி செய்யக்கூடிய நம்பகரமான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும் அப்பிரதேச மக்களிடையே நிலவி வரும் வாய்மொழி வரலாற்றுக் கதைகளில் இருந்து இவ்வாலயம் முன்பொரு காலத்தில் ஆகம மரபு சாராத கிராமிய ஆலயமாக இருந்துள்ளமை தெரிகின்றது. வேல் சின்னத்தை கொண்டிருந்த இவ்வாலயம் காலப்போக்கில் ஆகம மரபில் கற்கள் கொண்டு கட்டப்பட்ட ஆலயமாக வளர்ந்துள்ளதை உறுதிப்படுத்த முடிகி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன்றது. அண்மைக் காலங்களில் இவ்வாலயக் கட்டமைப்பில் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டு மிகப் பெரிய ஆலயமாக மீள் உருவாக்கம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த மீள் உருவாக்கப்பணிகளின் போது கிடைத்த பழைய ஆலயத்தின் கட்டிடப்பாகங்களும், சில வழிபாட்டுச் சின்னங்களும் புதிய ஆலயத்தில் வைத்துக் கட்டப்படாது அவை ஆலயத்தின் ஒரு பகுதியில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒன்றே பழைய ஆலயத்தின் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த செப்பு பட்டயத்துடன் கூடிய அலங்காரத் தூணாகும். இந்நிலையில் மன்னம்பிட்டி பிரதேசத்தில் காணப்படும் தொல்லியல், வரலாற்றுச் சின்னங்களை தேடிக் கண்டறிந்து அவற்றைப் பதிவு செய்து வரும் இப்பிரதேசத்திற்குரிய வரலாற்று ஆர்வலர் திரு. நகுலேஸ்வரன் பிரவின் என்பவர் இவ்வாலயத்தில் காணப்படும் செப்பு பட்டயத்தின் புகைப்படப் பிரதியொன்றை முன்னாள் சக்தி வானொலி அலைவரிசையின் பிரதானி திருமதி உமாச்சந்திரா பிரகாஸ் அவர்கள் ஊடாக எனக்கு அனுப்பி வைத்தார். இச் செப்பு பட்டயம் ஏறத்தாழ ஐந்தடி நீளமான தூணில் பொருத்தப்பட்டுள்ளது. தூணின் தொடக்கத்திலும், முடிவிலும் அரைவட்ட தாமரை வடிவம் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. தூணின் நடுப்பகுதியில் முழுவடிவத்தில் வடிவமைக்கப்பட்ட தாமரை புடைப்புச் சிற்பத்திற்கு வலப்பக்கமாக தெலுங்கு மொழியிலும், இடப்பக்கமாக தமிழ் மொழியிலும் சாசனங்கள் எழுதப்பட்டுள்ளது. தமிழில் உள்ள சாசனம் அக்கால மொழிவழக்கில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

(1) திருமுருக்கர் ஆலியம் ஆரு
(2) முக சுவாமி மூலஸ்த்
(3) தானம் வெங்கப்படி
(4) பலபேர் செத்து யா
(5) சக தற்மம் என முடிகின்றது.

தெலுங்கு வரிவடிவத்திலும் தெலுங்கு மொழியிலும் எழுதப்பட்ட சாசனத்தைப் படிப்பதற்கு அம்மொழியில் புலமையுடைய அறிஞர்களான பேராசிரியர் வை. சுப்பராயலு, பேராசிரி யர் பொ. இரகுபதி, கலாநிதி சு.இராஜகோபால் ஆகியோருக்கு சாசனத்தின் புகைப்படத்தை அனுப்பி வைத்திருந்தேன். அம்மூவரும் தமிழ்ச் சாசனத்தில் சொல்லப்பட்ட செய்தியையே பெரும்பாலும் அக்கால மொழிநடைக்கு ஏற்ப தெலுங்கு மொழியிலும் எழுதப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளனர். அதன் வாசகம் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

வேறுபட்ட இரு மொழிச் சாசனங்களும் சொல்லும் செய்தி தம்பன்கடுவையில் உள்ள சித்திரவேலாயுத கோவில் கற்பக்கிரகத்தில் உள்ள மூலஸ்தானத்திற்கு வெங்கலப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியை அமைப்பதற்கு பலரும் ஒன்று சேர்ந்து மக்களிடம் இரந்து (யாசகம் செய்து) பெற்றதை தானமாக வழங்கியது பற்றிக் கூறுகின்றன. பேராசிரியர் இரகுபதி அவர்கள் தமிழில் உள்ள சாசனத்தின் தொடக்க நிலை வரிவடிவங்களில் புள்ளி யிடாமலும், தொடர்ந்து வரும் வரிவடிவங்களில் புள்ளியிடப்பட்டும் சாசனம் எழு-தப்பட்டிருப்பதால் இச்சாசனம் எழுதப்பட்ட காலம் 18 ஆம் நூற்றாண்டு அல்லது 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம் எனக் கருதுகின்றார். இக்காலப் பகுதியில் மட்டக்களப்பு தேசத்துக் கோயில்களின் வரலாறு கூறும் கல்வெட்டுக்கள் சில பொறிக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் தமிழில் எழுதப்பட்டவை. ஆனால் தம்பன்கடவை சித்திரவேலாயுதர் ஆலயத்து செப்புபட்டயத்தில் தமிழோடு தெலுங்கு மொழியிலும் எழுதப்பட்டுள்ளமை புதிய வரலாற்றுச் செய்தியாகக் காணப்படுகின்றது. இதற்கான காரணங்கள் வரலாற்று ரீதியாக நோக்கப்பட வேண்டியவை.

15 ஆம் நூற்றாண்டிலிருந்து மட்டக்களப்பு தேசம் பெரும்பாலும் கண்டியரசின் ஆதிக் கத்திற்கு உட்பட்ட பிராந்தியமாகவே இருந்துள்ளது. இவ்வரசின் ஆதிக்கம் அநுராதபுரம், பொலநறுவை இராசதானியின் எல்லை வரை பரந்திருந்தது. கண்டியின் கடைசி சிங்கள மன்னன் ஸ்ரீவீரபராக்கிரம நரேந்திர சிங்கனுக்குப் பின் னர் அவ்வரசில் ஆட்சி புரிந்த ஸ்ரீவிஜயராஜசிங்கன் (1739- 1747), கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (1747-1782), ராஜாதிராஜசிங்கன் 1782-1798), ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் (1798- 1815) ஆகியோர் தமிழக மதுரை நாயக்க வம்சத்தை சேர்ந்-தவர்கள். இவர்களின் ஆட்சி மொழி தமிழக இருப்பினும் ஆட்சியாளர்கள், அதிகா ரிகள் என்பவர்களில் தாய் மொழி தெலுங்காகவும் இருந்துள்ளது. இதனால் இவ்-வரச அதிகாரிகளின் பங்களிப்பால் தம்பன்கடவை சித்திய வேலாயுதர் ஆலயத்து வெண்கலப்படி அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறுவதற்கும் இடமுண்டு. ஆனால் ஆலயத்தில் உள்ள செப்பு பட்டயம் அவ்வாலய வெண்கலப் படியானது பலர் ஒன்று கூடி பல இடங்களுக்கு சென்று மக்களிடம் இரந்து (யாசகம் பெற்று) பெற்ற நிதி உதவியைக் கொண்டே வெண்கலப் படி அமைக்கப்பட்டதாகக் கூறுவதால் இப்ப-ணியைக் கண்டி ஆட்சியாளர்களுடன் தொடர்புபடுத்துவது பொருத்தமாகத் தோன்ற வில்லை.

ஆனால் இலங்கையில் கண்டி இராசதானிக்கு முன்னரே தெலுங்கைத் தாய்மொ ழியாகக் கொண்ட மக்களும் வாழ்ந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. சிறப் பாக யாழ்ப்பாண இராசதானி காலத்தில் இருந்த படைப்பிரிவுகளில் சுதேச தமிழ்ப் படை வீரர்களுடன் பிறநாட்டுப் படைவீரர்களும் இணைந்து பணியாற்றியமைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சான்றாதாரங்கள் காணப்படுகின்றனர். அவர்களுள் தென்னிந்திய கன்னட, தெலுங்குப் படைவீரர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனர். இவ்வரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இப்படை வீரர்களில் ஒரு பிரிவினர் தமிழ் பேசும் மக்களாக இங்கேயே நிரந்தரமாகத் தங்கியுள்ளனர். இவர்களில் சிலர் தமிழர்களுடன் இணைந்து வடஇலங்கையில் உள்ள ஆலயங்கள் சிலவற்றில் பண்டாரம் என்ற பெயரில் அவ்வாலயங்களை மேற்பார்வை செய்பவர்களாகவும், பூசகர்களாகவும், மாலை கட்டுபவர்களாகவும் கடமையாற்றி வருகின்றனர். இவர்களை கோயில் பண்டா ரம் என்ற பெயரில் தனியொரு சமூகமாகவும் அழைக்கப்படுகின்றது. அவர்களின் வழிவந்தவர்கள் தற்காலத்தில் மொழியால் தமிழ்ச் சமூகங்களுடன் இரண்டறக் கலந்திருந்தாலும் பண்பாட்டால் சில தனித்துவமான அம்சங்களுடன் யாழ்ப்பாணத் தின் சில ஊர்களில் வாழ்ந்து வருவதைக் காணமுடிகின்றது. இது கிழக்கி லங்கைக்கும் பொருந்தும்.

கிழக்கிலங்கையில் அதிலும் குறிப்பாக மட்டக்களப்பின் வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்களின் தோற்றப் பின்னணிகள், மக்களின் சமய நம்பிக்கைகள், சடங்குகள், கிரிகை முறைகள், வழிபாட்டு மரபுகள் என்பவை சில தனித்துவ-மான அம்சங்களைக் கொண்டவை. இங்கு தோன்றிய பாசுபத சமயத்திற்கு தொன் மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு. இவ்வாலயங்களில் நீண்டகாலமாக பிராமணர்கள் அல்லாதவர்களே பூஜை செய்து வந்துள்ளனர். இதற்கு கோணே -ஸ்வரர் கல்வெட்டே சிறந்த ஆதாரமாகக் காணப்படுகின்றது. மேலும் இங்கி ருக்கும் ஆலயங்களை நிர்வகிப்பவர்கள், மேற்பார்வை செய்பவர்கள் பொதுவாக வண்ணக்கர் என்றே அழைக்கப்படுகின்றனர். இம்மரபு 2200 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தோன்றி வளர்ந்ததை அண்மையில் மட்டக்களப்பில் கண்டுபிடிக் கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனமும் உறுதிப்படுத்துகின்றது. இந்நிலையில் மட்டகளப்பு பூர்வசரித்திரம் என்ற மூலநூலில் இங்குள்ள ஆலயங்க-ளில் பணி செய்த சமூகங்களில் ஒன்றாக பண்டாரத்தையும் குறிப்பிடுகின்றது. அப் பண்டாரங்களில் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும் இருந்திருக்க வாய்ப்புண்டு. ஆயினும் அதை உறுதிபடுத்த மேலும் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இருப்பினும் இப்பிரதேசத்தில் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட சில சமூகங்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வருவதற்கு சில ஆதாரங்கள் காணப்படு கின்றன.

மட்டகளப்பு தேசத்து வாய்மொழி வரலாற்றுக் கதைகள் அப்பிரதேசத்தில் தோன்றிய புராதன ஆலயங்கள் சிலவற்றை அங்கு வாழ்ந்து வரும் வேடர் அல்லது பழங்குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுடன் தொடர்புடுத்திக் கூறுகின்றன. நீண்டகாலமாக ஏனைய சமூகங்களில் இருந்து விலகி காடுகளிலும், மலைகளிலும், இயற்கையான குகைகளிலும் வாழ்ந்த இம்மக்களில் ஒரு பிரிவினர் அண்மைக்காலத்தில் நடைபெற்ற யுத்தங்களுக்கு அஞ்சி நகரங்களை நோக்கி இடம்பெயர்ந்த போது ஏனைய மக்கள் தொடர்ந்தும் தமது பூர்வீக இடங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். இங்குள்ள இம்மக்களின் தனித்துவமான வாழ்வியல் அம்சங்கள் பற்றி அண்மையில் விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் கா.குக பாலன் அம்மக்களின் பேச்சு மொழியில் உள்ள பல சொற்களைப் புரிந்து கொள்வதற்காக அம்மொழியைப் பதிவு செய்து தமிழக அறிஞர்களான பேராசிரியர் வை.சுப்பராயலு, பேராசிரியர். விஜயவேணுகோபால் ஆகியோருக்கு அனுப்பி வைத்தார். அம்மொழிப் பதிவை விரிவாக ஆராய்ந்த இரு அறிஞர்களும் அம்மொழியில் பெரும்பாலும் தெலுங்கு மொழிச் சொற்களே காணப்படுவதாக அடையாளப்படுத்தியிருந்தமை இவ்விடத்தில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

2017 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் இப்பழங்குடி மக்கள் வாழ்ந்து வரும் மட்டக்களப்பின் வாகரை போன்ற இடங்களில் நாம் களவாய்வு மேற்கொண்ட போது அம்மக்கள் சிறு குடிசைகளிலும், குகைளிலும் வாழ்ந்து வருவதைக் காணமுடிந்தது. இந்நிலையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் மன்னம்பிட்டி தம்பன்கடுவையில் பண்டைய குடியிருப்புகள், வயல் நிலங்கள் இருந்த இடங்கள் அண்மைக் காலங்களில் கைவிடப்பட்டு அவ்விடங்களின் ஒருபகுதி காடுகள், மலைகள், குகைகள் என்பவற்றைக் கொண்ட பிரதேசமாகக் காணப்படுகின்றது. அத்துடன் அங்குள்ள குகைகளில் செயற்கையான சில மாற்றங்களைச் செய்து அண்மைக் காலம் வரை பழங்குடி மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுவதுடன் அச்சமூகத்தினரைச் சார்ந்த சில குடும்பங்கள் தற்காலத்திலும் வாழ்ந்து வருவதாக அறிய முடிகின்றது. இதனால் அவர்களின் தாய் மொழி தெலுங்காக இருந்திருக்கலாம். இவ்வரலாற்றுப் பின்னணியில் இங்கிருக்கும் சித்திரவேலாயுதர் ஆலயத்தில் காணப்படும் தெலுங்கு மொழிச் சாசனத்தை இங்கு வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற பழங்குடி மக்களுடனும் தொடர்புபடுத்திப் பார்க்கவும் இடமுண்டு. இருப்பினும் இக்கருத்தை உறுதிப்படுத்த மேலும் ஆய்வுகள் செய்யப்படுவது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### அண்மையில் வெளியான

## நம்மட திருக்கோணமலைப் படைப்பாளிகளின்

# படைப்புகள்

| | | |
|---|---|---|
| பெயர் | : மூதூர் முகபாத்திகள் |  |
| ஆசிரியர் | : சாகிர் அப்துல் ஜபார் | |
| நூல் வகை | : சிறுகதை | |
| பக்கம் | : 122 | |
| விலை | : உருபா. 500.00 | |
| தொடர்பு | : புலனம் - 0762643998 | |

| | | |
|---|---|---|
| பெயர் | : யாவும் ஆனந்தமே |  |
| ஆசிரியர் | : அஸ்வினி வையந்தி | |
| நூல் வகை | : கவிதை | |
| பக்கம் | : 60 | |
| விலை | : உருபா. 300.00 | |
| தொடர்பு | : புலனம் - 0754719026 | |

| | | |
|---|---|---|
| பெயர் | : தேடலால் மனிதன் பூரணமடைகிறான் |  |
| தொகுப்பாசிரியர்கள் | : A.C.M. அஸ்மி, J.M. இஹ்ஷான் | |
| நூல் வகை | : கட்டுரைத் தொகுப்பு | |
| பக்கம் | : 96 | |
| விலை | : உருபா. 520.00 | |
| தொடர்பு | : புலனம் - 0771020030 | |

| | | |
|---|---|---|
| பெயர் | : வண்ணக் கனவுகள் |  |
| ஆசிரியர் | : கிண்ணியா சபீனா | |
| நூல் வகை | : கவிதை | |
| பக்கம் | : 120 | |
| விலை | : உருபா. 600.00 | |
| தொடர்பு | : புலனம் - 0743696221 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org